www.padippakam.com

பிப்ரவரி [redacted] 2001 ★ விலை ரூ. 5

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2032 பெரியாராண்டு 122

## "சுயமரியாதை இயக்கப் பவழவிழா"



தந்தை பெரியாரும் அன்னை நாகம்மையாரும்

★ பவழ விழா - வெள்ளி விழா ஆண்டில் நம்மை நாம் திறனாய்வோம் !

❖ பெண்களுக்கான இட ஒதுக்கீடு - ஒளிந்திருக்கும் உண்மைகள்

★ இந்துத்துவத் திருடர்களைப் புறங்காணுங்கள் !

படிப்பகம்

www.padippakam.com

உள்ளே...

தலையங்கம்


* பவழ விழா - வெள்ளி விழா ஆண்டில் நம்மை நாம் திறனாய்வோம்! 1
- வே.ஆனைமுத்து

* பெண்களுக்கான இடஒதுக்கீடு - ஒளிந்திருக்கும் உண்மைகள்- க.முகிலன் 5

* இந்துத்துவத் திருடர்களைப் புறங்காணுங்கள் - வே.ஆனைமுத்து 10

* பலித்தவரை... மேலும் சில சிந்தனைகள் - து.தில்லைவனம் 21

* தாம்பரம் - தமிழ்வழிக் கல்வி மாநாடு... 24


கவிதை


* கும்ப(ல்) மேளா... - தமிழேந்தி



# சிந்தனையாளன்

(தமிழ் மாத இதழ்)

தனி இதழ் ரூ.5
ஓர் ஆண்டுக் கட்டணம் ரூ.60
5 ஆண்டுகளுக்கு 1.5.2000 முதல் ரூ.250
வாழ்நாள் கட்டணம் 1.5.2000 முதல் ரூ.1000

இன்றே சந்தா செலுத்துங்கள்!
ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!!

பணம், டி.டி. அனுப்பிட
'சிந்தனையாளன்'
SINTHANAIYALAN
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம்
சென்னை - 600 005.
தொலைபேசி: 852 28 62.


## முனைவர் கடவூர் மணிமாறன் பயிற்சி நிறுவன முதல்வர் ஆனார்

கரூர் மாவட்டம், மாயனூர் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனப் பொறுப்பு முதல்வராகப் பணியாற்றியவரும், தனித் தமிழ் ஆர்வலரும், முப்பதுக்கும் மேற்பட்ட படைப்புகளை வழங்கியிருப்பவருமான முனைவர் கடவூர் மணிமாறன் முறையான பணி உயர்வு பெற்று நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவன முதல்வராகப் பொறுப்பு ஏற்றுள்ளார்.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ள இவர் தமிழ்நாட்டுப் பாடநூல் கழக ஆசிரியர் குழுவில் இடம் பெற்றுப் பல பாடநூல்களை எழுதியுள்ளார். சிறந்த சொற்பொழிவாளர், மரபு மீறாத பாக்களை யாத்து வருபவர். இளம் படைப்பாளிகள் பலரையும் உருவாக்கி வரும் இவர் பணி சிறக்க வாழ்த்துகிறோம். பணி உயர்வின் பொருட்டுச் சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்கு ரூ.200/- வழங்கப்பட்டுள்ளது.

## 'வெல்லும் தூய தமிழ்' 8 ஆம் ஆண்டு விழா

புதுச்சேரியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கு 'வெல்லும் தூய தமிழ்' மாத இதழின் எட்டா ஆண்டு விழா 28.12.2000 அன்று நடைபெற்றது ஆதித் திராவிடர் நலத்துறைத் துணை இயக்குந தியாகராசன் தலைமையேற்றார். க.தமிழ மல்ல வரவேற்றுப் பேசினார். கல்லாடன் ஆறு.செல்வன், தன.அருணாசலம், தமிழ்நெஞ்சன் கோ.மன்றவாணன் ஆகிய பாவலர்கள் வாழ்த்துப்ப வழங்கினர். முனைவர் சோ.சத்தியசீலன் வெல்லு தூய தமிழ் 7 ஆம் ஆண்டுத் தொகுப்பை வெளியிட் ஆய்வுரை வழங்கினார். அத் தொகுப்பை, முத் சவுளி மாளிகை உரிமையாளர் அ.இராமச் சந்திர பெற்றுக்கொண்டார். வான்கோவல் செய் ஆசிரியர் தணிகைத் தம்பி, சிறுகதைச் சிறப்பிதழை வெளியிட்டுப் பேசினார்.

திருக்குறள் கற்பியல் பற்றிக் 'குறள் மணம் ஆசிரியர் செ.வரதராசன் உரை நிகழ்த்தினார் வெல்லும் தூய தமிழ்ச் சிறுகதைப் போட்டிக்கா முதல் பரிசை ஆசிரியர் த. தமிழ்ச் செல்வி எழுத்தாளர் பூதலூர் முத்துக்கு வழங்கினார். திரு வி.க. அ.உ. பள்ளித் தலைமையாசிரியர் ம.அய்யாச சாமி வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியர் சோ. இராமச்சந்திரன் நன்றி கூறினார். இவ்வாண்டில் சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகையை வழங்கிய புரவலர் மா.ப.கிருட்டிணன்.

படிப்பகம்

www.padippakam.com

## சமதர்மக் காவலர்கள்



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

## சமூகநீதிக் காவலர்கள்



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா


# சிந்தனையாளன்

சுவடி : 23 | மாத இதழ் | ஏடு: 6


இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

### கொள்கை முழக்கம்

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்

- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!

- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!

- பெரியார்


ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

ஆசிரியர் குழு

வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

சென்னை பிப்பிரவரி 2001

விலை ரூ.5/-


# பவழ விழா - வெள்ளிவிழா ஆண்டில்

# நம்மை நாம் திறனாய்வோம்!

'சகுனம் சொல்லுகிற பல்லி கழனிப் பானையில் விழும்' என்பது பழமொழி. மக்கள் பல்லியின் சகுனத்தை நம்புகிறார்கள். ஆனால் பிடி தவறித் தானே கழுநீர் பானையில் விழுவது பல்லிக்குத் தெரியாது என்பது இதன் பொருள்.

'கடவுள் - மதவாதிகள் மூட நம்பிக்கைக்காரர்கள்' என்றும், 'நாமெல்லாம் பகுத்தறிவு வாதிகள்' என்றும் நாம் தம்பட்டம் அடித்துக் கொள்வோம்.

ஆனால் மூடநம்பிக்கைகளைக் கட்டிக் காக்கிற அமைப்புகள் எவை, அவற்றைக் கைவிட்டவர்களாக எத்தனை விழுக்காடு மக்களை உருவாக்கியிருக்கிறோம் என்று நம்மை நாம் ஆய்வு செய்வது இல்லை. இது நமக்கு உள்ள ஒரு மூடத்தனம். 'ஊருக்கு உபதேசம்; உனக்கும் எனக்கும் இல்லையடி' என்கிற மவுடீகத்தின் - போலித்தனத்தின் இயல்புக்கு ஆளானதன் வெளிப்பாடு இது.

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்கிற ஆறும் ஒரு நாடு என்பதற்கு உள்ள இன்றியமையாத கூறுகள். இது வள்ளுவர் கூற்று.

இவற்றின் தன்மைகளும் உள்ளடக்கங்களும் அளவுகளும் காலந்தோறும் மாறலாம்; ஆனால் இவை ஒரு நாட்டின் இன்றியமையாத கூறுகள் என்பது மாற இடமில்லை.

தமிழ்நாட்டுக்கான படை, தமிழன் என்கிற குடி உரிமை உள்ள தமிழ் மக்கள் கூட்டம், தமிழக மக்களுக்கான உணவுக்கும் தொழிலுக்கும் போதிய வசதி, தமிழ்நாட்டைக் காக்கும் அமைச்சகம், பாதுகாப்பு வசதிகள் என்று இருக்கிற ஓர் அமைப்பில்தான் பெரியார் விரும்பியபடி, மக்களிடையே உயர்வு - தாழ்வு, தீண்டாமை நீங்கும்; பெண்ணடிமை தொலையும்; மூட நம்பிக்கை ஒழியும்.அதுவரையில் இவற்றுள் எதுவும் ஒழியாது. இந்தியாவிலுள்ள 30 மாநிலங்களின் மற்றும் 7 மய்ய ஆட்சிப் பகுதிகளின் நிலையும் இதுதான்.

படிப்பகம்

www.padippakam.com



இவை அனைத்தும் 'இந்தியா' என்கிற போலியான ஒரு நாட்டின் அடிமை அமைப்புகள்; மாநகராட்சிகள் - நகராட்சிகள் - பேரூராட்சிகள்; ஊராட்சிகள் போன்ற படிக்கட்டு முறையிலான அடிமைப்பட்ட ஆட்சி அமைப்புகள்.

இந்தஆட்சி அமைப்பும் - அரசு அமைப்பும் அப்படியே நீடிக்கிற வரையில் - இவற்றால் இவை கட்டிக் காப்பாற்றப்படுகிற மூட நம்பிக்கைக் கல்வி அப்படியே இருக்கும்; கடவுள் - மத நம்பிக்கை கெட்டியாக இருக்கும்; மேல் சாதி, கீழ்ச்சாதி அமைப்பு அப்படியே இருக்கும்; ஆண் ஆதிக்கம் நீடிக்கும்; மனிதனை மனிதன் சுரண்டுவது அப்படியே நீடிக்கும். மனிதனின் நல்வாழ்வுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், கல்வி, பிழைப்புக்கான தொழில், சம உரிமைக்கான வாய்ப்பு அறிவுடைமையான நடப்பு இவை ஓர் அரசினால் உறுதி செய்யப்படாமல் நீடிக்கிற வரையில் இங்கு எந்த மாற்றமும் வராது.இதை நாம் எப்படி உறுதி செய்வது?

இந்தியாவில் பெரிய எண்ணிக்கையில் உள்ள மக்களை அடக்கி ஆள வேண்டும். அதனால் தான் இவர்களுக்குக் கல்வி உரிமையும் ஆட்சியில் பங்கு உரிமையும் திட்டமிட்டு இன்னமும் மறுக்கப்படு கின்றன.

அதனால்தான், மனிதனில் உயர்வு - தாழ்வு பிறவியிலேயே உண்டு என்பதைச் செய்து காட்டுகிற இடங்களாகக் கோவில்கள், மடங்கள், மத நிகழ்ச்சிகள், சடங்குகள் இருக்கின்றன. அவை அப்படியே காப்பாற்றப்படுகின்றன.

அதனால்தான், பொருளாதாரக் குவியலும், நில உடைமைக் குவியலும் அப்படியே காப்பாற்றப்படுகின்றன.

1926 இல் பெரியார் சுய மரியாதை இயக்கம் தொடங்கிய போது திருப்பதிக் கோயிலின் ஆண்டு வருமானம் வெறும் 18 இலட்சம் ரூபாய்; இன்று அதன் ஆண்டு வருமானம் 450 (அ) 500 கோடி ரூபாய். திருப்பதி, திருவண்ணாமலை, திருவரங்கம், பழநி, மதுரை கோவில்களும்; சபரி மலையும், மேல் மருவத்தூரும், சாய்பாபா நிலையமும்; நாகூர் தர்காவும், வேளாங்கண்ணியும் அப்படி அப்படியே இன்றும் கட்டிக் காப்பாற்றப் படுகின்றன. யாரால்? அரசினால்!

எழுத்தறிவு வளர்ந்து வருகிறது. ஆனால் மழலைக் கல்வி முதல் முனைவர் பட்டக் கல்வி வரையில் கடவுள் -மத - சாஸ்திர - இதிகாச - புராண நம்பிக்கைக் கல்வியே - தரப்படுகிறது. யாரால்? அரசினால்.

இந்தியாவிலும், பிற நாடுகளிலும் இவை இப்படிப்பட்ட தன்மையிலேயே நீடிக்கிற அந்த வலிமையைக் கட்டிக் காப்பவை - இந்தியாவிலும் அங்கங்கேயும் இருக்கிற அரசுகளும், ஆட்சி அமைப்புகளும், -அச்சட்டங்களின் படி வழங்கப்படுகிற நீதி முறையும், கல்வி முறையும்தான்.

இவை அடியோடு குலைக்கப்படுகிற வரையில் இந்தியாவில் மனிதனில் உயர்வு தாழ்வு போகாது; பெண்ணடிமை ஒழியாது; கடவுள் -மத மூடநம்பிக்கை மாளாது.

இந்த ஆய்வு முறைக்கு விடுமுறை தந்து விட்டு, இருக்கிற அரசு அமைப்பின் கீழ் மணி தோறும் - வீடு தோறும் - தெருத் தோறும் - ஊர் தோறும் பேச்சுப் பரப்புரையும், இசைப் பரப்புரையும் எத்துணைக் காலத்துக்கு நாம் செய்தாலும் அது கடலில் கரைத்த பெருங்காயம் போன்றதுதான்.

தமிழக அரசின் கண்காணிப்பில் உள்ள பெரிய கோயில்கள் 35,000. இவற்றில் முக்காலே மூன்று வீசம் பார்ப்பானை மட்டுமே அர்ச்சகனாகக் கொண்டவை. இதை நம் பரப்புரை மட்டும் மாற்றாது; சட்டமும் ஆட்சியும்தான் மாற்ற வேண்டும்.

திருமணம், திதி, கருமாதி செய்கிற புரோகிதன், தமிழ்நாட்டிலுள்ள 54 ஆயிரம் ஊர்களில், பெரிதும் பார்ப்பனனே. இது அவனுக்கு மட்டுமே 100க்கு நூறுமாக ஒதுக்கப்பட்டு விட்டது. இதைப் பரப்புரை மூலம் மட்டுமே மாற்ற முடியாது. கல்வித் திட்டம், ஆட்சிச் சட்டம் மூலமே இதை மாற்ற முடியும்.

ஆட்சியாளராக இருந்த முகமது நபி,அரேபிய நாட்டுக் காட்டு மனிதர்களைத் திருத்தி 1400 ஆண்டுகளுக்கு முன்னரே, உருவ வணக்கத்தைஒழிக்க முடிந்தது.

இங்குக் கடவுள் சிலைகள் - மகான்கள் சிலைகள் - தலைவர்கள் சிலைகள் வணங்கப் படுவதை ஒரு விழுக்காடு அளவு மக்கள் கூடக் கைவிடச் செய்ய முடியவில்லை;

படிப்பகம்

www.padippakam.com



முடியவும் முடியாது. பெரியார் சொன்னபடி, இவற்றை யெல்லாம் எடுத்துக் கண்காட்சிப் பொருள்களாக அந்தந்த ஊரில் ஒரே இடத்தில் வைக்கக் கூடிய வல்லமை படைத்த ஓர் அரசு இங்கே இல்லை.

ஊரார்க்கும் - உலகத்தார்க்கும் பகுத்தறிவைப் பரப்புரை செய்வதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளுகிற நாமும் - நம்மைப் போன்றுள்ள அனைத்துப் பெரியார் தொண்டர்களும், மற்றும் பகுத்தறிவு பேசுவோரும் இந்த சுய மரியாதை இயக்கப் பவழ விழா ஆண்டில் -மா.பெ.பொ.க.வின் வெள்ளி விழா ஆண்டில் குழுவினராகக் கூடி இவை பற்றி ஆய்வு செய்ய வேண்டும்; கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்தி விவாதிக்க வேண்டும்.

இதில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களுக்குக் கூடுதலான - முழுமையான பொறுப்பு உண்டு.

பெரியார் பெயரில் - அம்பேத்கர் பெயரில் -மார்க்சு - இலெனின் பெயர்களில் இயக்கங் களும் அமைப்புகளும் நடத்தும் அனைவர்க் கும் இதில்பெருங் கடமையும் பங்கும் உண்டு.

**சமயம் தோய்ந்த கல்வியையும், சமயம் சார்ந்த கல்விக் கூடங்களையும்; தனியார் கல்வி - தொழில் - வணிக நிறுவனங் களையும், தனியார் நில உடைமையையும் அப்படி அப்படியே நிலைக்க வைத்துக் கொண்டு, நாம் இன்று செய்திடும் எந்தப் பெரிய தொண்டும், பணியும், ஈகமும் நம்மை மரியாதைக்குரிய தனி மனிதனாக ஆக்கிக் கொள்ள மட்டுமே பயன்படும். இப்போக்கு மிகவும் இரங்கத் தக்கது.**

**கௌடல்யன் விதித்த** அரசியல் கோட்பாட்டை சுங்கர் காலம், குப்தர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், வெள்ளையர் ஆட்சி, இந்தியர் ஆட்சி என்கிற எல்லா ஆட்சிக் காலங்களிலும் மேற்கொண்டு, 'அரசு' (STATE) என்பதைக் கைப்பற்றிக் கொள்ளுவதை மட்டுமே பார்ப்பான் செய்கிறான்; அந்த அரசின் பாதுகாப்பில் பணக்காரனும் பழமை வாதியும் இருக் கிறான். இரண்டாயிரம் ஆண்டாக இதுவே அரசியலாக அப்படியே இருக்கிறது.

இது, அப்படியே 21 ஆம் நூற்றாண்டிலும் தொடர ''உண்மையான அரசு'' என்பதைப் பிடிப்பதையும் தக்க வைத்துக் கொள்வதை யும் ஒரே குறிக்கோளாகக் கொண்டு தான், இந்தியாவிலுள்ள காந்தியப் பார்ப்பனர் களும், இந்துத்துவப் பார்ப்பனர்களும் அல்லும் பகலும் உயிரைப் பணயம் வைத்துப் போராடுகின்றனர்; இதில் மேலே மேலே ஏறி வருகின்றனர்.

இத்தாலிய மாக்கியவல்லியின் இதே அரசியல் கோட்பாட்டை அப்படியே இன்றும் ஏற்று நடைமுறைப்படுத்துவதால் தான் அய்ரோப்பிய - வெள்ளையர் நாடுகளில் பணக்காரத் தன்மையையும் பழமை மதத்தையும் ''உண்மையான - தன்னுரிமை பெற்ற அரசு''களின் மூலம் காப்பாற்றிக் கொள்கின்றனர்; அதன் மூலம் உலகையே ஆதிக்கம் செய்ய வழி கோலி விட்டனர்.

திருவள்ளுவர் காலத்தில் சொல்லப்பட்ட 'அரசு' (STATE) பற்றிய கோட்பாட்டை நன்கு புரிந்து, இங்கு 'எல்லா மாற்றங்களையும், தரவல்ல 'ஓர் அரசு' எது?'' என்பதையே காணத் திறன் அற்ற நாம் - எப்போது, எப்படி வெற்றி பெற முடியும்? சிந்தியுங்கள்! விவாதியுங்கள்! விடிவு காண முன் வாருங்கள்!!

இதை நாமும், நம்மைப் போன்ற பெரியார் தொண்டர்களும் இப்போதேனும் புரிந்து கொள்ள வேண்டும்; இந்த இரங்கத்தக்க நிலையை மாற்றிட இன்றே நாம் எல்லா வகைகளிலும் முயல வேண்டும்.

மாற்றம் - மாற்றம் - மாற்றம் என்பது மட்டுமே புரட்சியின் நோக்கம். நம் சிந்தனையிலும் செயல் திட்டங்களிலும் முதலில் இத்தன்மையில் ஒரு மாற்றம் வந்தே தீர வேண்டும்.

இத்தகைய மாற்றமும், மாற்றத்தின் அடிப்படையில் செயல் திட்டங்களும், செயல் திட்டங்களை மேற்கொண்டிடத் தன்னலமற்ற - பயிற்சி பெற்ற பல்லாயிரம் தொண்டர்களும், பல்லாண்டுகள் பணி புரியும் தொடர்ந்த முயற்சியும் மட்டுமே பெரியார் காண விரும்பிய சுயமரியாதை - சமதர்ம சமுதாயத்தை இங்கே கொணர முடியும். சிந்தியுங்கள்!

1.2.2001 வே.ஆனைமுத்து

**தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல்**

www.padippakam.com



# பொங்கல் விழா - தமிழர் திருநாள் - திருவள்ளுவர் நாள் விழாச் செய்திகள்

## சோளிங்கபுரம்

### புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்

சோளிங்கபுரத்தில் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் சார்பில் 16.1.2001 அன்று பொங்கல் விழா - திருவள்ளுவர் நாள் விழா நடைபெற்றது. பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் வினாடி வினா போட்டியைப் பாவலர் தமிழேந்தி நடத்தினார். தொடர்ந்து பள்ளி மாணவர் களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அடுத்து திருக்குறள் இரா. கனகசுப்புரத்தினம் அவர் களின் பதினாறு கவனக நிகழ்ச்சி நடத்திக் காட்டப் பட்டது. விழாவிற்கு க.முகிலன் தலைமை ஏற்றார். வெ.சுப்பிரமணி வரவேற்புரையும் க.குப்புசாமி நன்றியுரையும் கூறினர். இறுதியில் பங்கேற்ற மாணவர் க்ளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### பாவேந்தர் தமிழ் மன்றம், இராணிப்பேட்டை

வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டை நகரம், தொழிற் பேட்டையைச் சேர்ந்த பாவேந்தர் தமிழ் மன்றத்தின் சார்பில் சனவரி 14, 15 இரு நாளும் சிறுவர் சிறுமியரின் பல்வேறு வகைத் திறனறி போட்டிகள், கருத்தரங்கம், வழக்காடு மன்றம் முதலியன சிறப்புடன் நடைபெற்றன. கருத்தரங்கில் பேராசிரியர் இர. நடராசன், சி.முனிசாமி, பெ. தனராசு ஆகியோர் பங்கேற்றனர். 'தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சிக்குப் பெறும் கரணியம் உட்பகையே' என்கிற தலைப்பில் நடந்த வழக்காடு மன்றத்திற்குப் பேராசிரியர் இக்பால் நடுவர் பொறுப் பேற்றார்.வழக்கைத் தொடுத்தும் மறுத்தும் மா.செ.தமிழ்மணி, வாலாசா வல்லவன் வாதிட்டனர். அரச மாணிக்கம், தமிழ்க் கனல் உள்ளிட்ட தோழர்கள் விழா ஏற்பாட்டினைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

### தமிழ் - தமிழர் இயக்கம், அம்மூர்

சனவரி 14, 15 நடந்த நிகழ்ச்சிகளில் பேராசிரியர் சுப.வீ, புலவர் தமிழ்மாறன், தியாகு, கவிஞர் இன்குலாப், தமிழேந்தி, வாலாசா வல்லவன், பா.தமிழ்ச் செல்வி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். 'வாலாசா ரோட் சந்திப்பு' என வழங்கப்பட்டு வந்த பகுதிக்குப் 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நகர்' எனப் பெயரிடப்பட்டு, புதிய பெயர்ப்பலகையைப் பேராசிரியர் சுப.வீ திறந்து வைத்தார். சீ.இளங்கோ உள்ளிட்ட தோழர்கள் சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந் தனர்.

### திருவள்ளுவர் தமிழ்ப் பேரவை, குடியேற்றம்

17.1.2001 அன்று திருவள்ளுவர் நாள் பேரணி, கருத்தரங்கம், ஓரங்க நாடகம் ஆகியன நடத்தப்பட்டன. பேரணியைப் பேராசிரியர் க.சேக்மீரான் தொடங்கி வைத்தார். புதுக்கோட்டை பாவாணன், புலவர் தமிழ் மாறன், சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. தனபால் முதலியோர் கருத்தரங்கில் பங்கேற்றனர். தமிழ்க்குமரன், சி.ச. பலராமன், முல்லை சுந்தரேசன் உள்ளிட்ட தோழர்கள் ஏற்பாடுகளை ஒருங்கமைத்தனர்.

### பாவேந்தர் இலக்கியப் பேரவை, விழுப்புரம்

15.1.2001 அன்று விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் திருவள்ளுவர் சிலை அருகிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. பின்னர் நடந்த கூட்டத்திற்குத் தமிழ்நாடு திராவிடர் கழக மாவட்டத் தலைவர் அரு. முத்தமிழடியான் தலைமை தாங்கினார். அ. வீரமணி, அ.சிவ ஞானம், இ,. வேம்மணராசு, க.பாலமுருகன் உள்ளிட்டவர்கள் உரையாற் றினர்.

### பாவேந்தர் தமிழியக்கம், சீர்காழி

14.1.2001 அன்று சீர்காழி பாவேந்தர் தமிழியக்க இணைச் செயலாளர் சோ.கோவிந்தராசன் மற்றுமுள்ள தோழர்கள் ஏற்பாட்டில் சீர்காழியிலும் வேலூர் மாவட்டம் தக்கோலம், ரெண்டாடி நீலகிரி மாவட்டம் பந்தலூர் ஆகிய ஊர்களிலும் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. தக்கோலம், ரெண்டாடியில் நடந்த நிகழ்ச்சிகளில் பேராசிரியர் பெரியார்தாசன் சிறப்புரை யாற்றினார். சீர்காழியில் கா.சுப்ரவேலு, மா.முத்துச்சாமி மற்றும் பலர் உரையாற்றினர்.

### முற்போக்கு சமூகநீதிப் பேரவை, காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் முற்போக்கு சமூக நீதிப் பேரவையின் சார்பில், பி.டி.வி.எஸ் உயர்நிலைப் பள்ளியில், பொங்கல் திருநாளை முன்னிட்டு, 14.1.2001 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு க.கோதண்டன் தலைமையில் நடைபெற்றது. தே.மாதவன் வரவேற்புரை நிகழ்த்தினார். கு.அருளானந்தம், ச.யோகநாதன், நாத்திகம் நாகராசன், தமிழ் இனியன், தே.பவணந்தி, சு. கோதண்டம் ஆகிய தோழர்கள் பங்கேற்ற கருத்தரங்கமும் நடைபெற்றது.

டாக்டர் விமுனா மூர்த்தி தொகுப்புரை யாற்றினார். சிறப்புரையில் கவிஞர் தணிகைச் செல்வன் தமிழர் வரலாற்றுச் செய்திகளை விளக்கினார். இறுதியில் மு. ஜெயப்பிரகாஷ் நன்றியுரையுடன் இரவு 9.15 மணிக்கு விழா நிறைபெற்றது. ★

படிப்பகம்

www.padippakam.com



# பெண்களுக்கான இடஒதுக்கீடு - ஒளிந்திருக்கும் உண்மைகள்

க. முகிலன்

கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கூடிய நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடர் கேலிக் கூத்தாக முடிந்தது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மூன்று மத்திய அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்ற பிரச்சினையால் பத்து நாட்கள் பாழாயிற்று. கூட்டத் தொடரின் கடைசி இரண்டு நாட்களும் (டிசம்பர் 21, 22) பெண்கள் இடஒதுக்கீடு மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே கலவரத்தில் முடிந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்விரண்டு பிரச்சினைகள் பற்றி நாடாளுமன்றத்தில் எந்தவொரு கட்சியும் தன் நிலைபாட்டைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தவில்லை.

இந்திய வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டில், இடஒதுக்கீடு போல் வேறு எந்தவொரு பிரச்சினையும் தொடர்ந்து முதன்மையான விவாதப் பொருளாக இருந்ததில்லை. ஏனெனில் அரசியலில் ஆட்சி அதிகாரத்தில் - அரசு நிர்வாகத்தில் - கல்வியில் இட ஒதுக்கீடு என்பது மேல் சாதியினராகவும் பெருநில வுடைமையாளராகவும், பெருந் தொழில் முதலாளிகளாகவும் இருக்கின்றவர்களின் ஆதிக்கத்தைக் குலைப்பதாக இருப்பதால் ஆளும் வர்க்கம் இன்றுவரை இடஒதுக் கீட்டை எதிர்த்து வருகின்றது.

பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் மாநிலச் சட்டமன்றங்களிலும் இடஒதுக்கீடு அளிப்பது என்பதைப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு 20 ஆம் நூற்றாண்டில் அரசியல் இடஒதுக்கீடு, உத்தியோகம்,கல்வி ஆகியவற்றில் இடஒதுக்கீடு பற்றிய வரலாற்று உண்மைகளை நாம் அறிந்திருக்க வேண்டியுள்ளது. இதன் பின்னணியில்தான் பெண்களுக்கான அரசியல் இடஒதுக்கீட்டின் கோரிக்கை பற்றியும் அதுபற்றி எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் பற்றியும் தெளிவான புரிதலைப் பெற முடியும்.

1917 இல் மாண்டேகுவிடம் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விண்ணப்பம் தரப்பட்டது. சொத்துரிமை, வருமானம், கல்வித் தகுதி முதலான அடிப்படையில் ஆண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படுவது போலவே பெண்களுக்கும் இவற்றின் அடிப்படையில் வாக்குரிமை வழங்க வேண்டும் என்று கோரப்பட்டது. பெண்கள் ஆண்களை விட பலவீனமானவர்கள் என்று கூறித் தனிச் சலுகையோ உரிமையோ வேண்டாம் என்று பெண்ணுரிமை இயக்கங்கள் கூறின. 1921 இல் தான் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

இதே கருத்தை சரோஜினி நாயுடு, அருணா அசஃப் அலி, ராஜ்குமார் அமிர்த கௌரி போன்றோர் ஆங்கிலக் கல்விச் சங்கம் (WIA) மூலம் 1926 இல் சென்னை மாகாணச் சட்டசபை உறுப்பினராக நியமிக்கப்பட்ட - முற்போக்கு சிந்தனை கொண்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கூடப் பெண்களுக்குத் தனிச்சலுகை யோ இடஒதுக்கீடோ அளிப்பதை எதிர்த்தார். 1930 இல் பம்பாய் நகரில் நடைபெற்ற அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டில் சரோஜினி நாயுடு பெண்களுக்கென்று தனி உரிமை கேட்பது பெண்கள் தம்மையே ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள் என்று ஒத்துக்கொள்வதாகும் என்றார்.

படிப்பகம்

www.padippakam.com



தாழ்த்தப்பட்டவர்களுக்கான அரசியல் ஒதுக்கீடு குறித்து காந்திக்கும் - அம்பேத் கருக்கும் இலண்டனில் வட்ட மேசை மாநாட்டின் போது கடும் மோதல் ஏற்பட்ட போதும், பிரிட்டிசு ஆட்சி தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்குத் தனி வாக்காளர் தொகுதிக்கான ஆணை பிறப்பித்த பிறகு காந்தியார் சாகும் வரை உண்ணா நோன்பு மேற்கொண்ட காலத்திலும் பெண்ணுரிமை அமைப்புகள் இடஒதுக்கீட்டிற்கு எதிராகத் தீர்மானம் இயற்றின - காந்தியச் சிந்தனையின் தவறான அணுகு முறையே இதற்குக் காரணம். பெண் - தியாகத்தின் திருஉருவம், வீட்டின் குலவிளக்கு, ஆணுக்கு வழிகாட்டக் கூடிய அன்பும் பொறுமையும் கருணையும் கொண்டவள் என்று கூறிக் கூறிப் பெண்களின் பங்களிப்பை வீட்டிற்குள் முடக்கிட முயன்றார் காந்தி! அரசியலில், ஆட்சியில், நிர்வாகத்தில், தொழில்களில், சொத்துரிமையில் சம உரிமையும் பங்கும் பெற வேண்டும் என்றுகாந்தி ஒருபோதும் கூறியதில்லை.

பெண்களுக்கான தனி இடஒதுக்கீடுக் கோரிக்கை அரசியல் சட்ட நிர்ணய அவையில் எழுப்பப்பட்டது. ஆனால் அரசியல் சட்ட நிர்ணய அவையில் இருந்த பதினோரு பெண் உறுப்பினர்களும் பெண்களுக்குத் தனி ஒதுக்கீடு அளிப்பது அவர்கள் பொதுத் தொகுதியில் போட்டியிடுவதைத் தடுக்கும்; பெண்களின் வளர்ச்சியை முடக்கும்; பெண்களின் அறிவாற்றலுக்கும் திறமைக்கும் இடஒதுக்கீடு இழுக்காகும் என்று கூறி எதிர்த்தனர்.

ஆனால் 25 ஆண்டுகள் கழித்து இதே பெண் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நியமன முறையை நீக்கி விட்டு, தேர்தலில் தனி இடஒதுக்கீடு வேண்டும் என்று கேட்டனர். இந்தியாவிலும் பெண்களின் நிலை குறித்த குழு (Committee on the Status of Women in India - CSWI) 1974 இல் கூட நாடாளுமன்றத்திலும் மாநிலச் சட்ட மன்றங்களிலும் பெண்களுக்குத் தனி ஒதுக்கீடு வேண்டாம் என்று கருத்துரைத்தது.

1983இல் கர்னாடகத்தில் இராமகிருஷ்ண ஹெக்டே முதலமைச்சராக இருந்தபோது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நசீர் சாகிப் அவர்களின் பெரு முயற்சியால், அசோக் மேத்தா குழுவின் பரிந்துரையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 25 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. 1984 இல் இராசீவ் காந்தி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு கர்னாடகத்தில் அளிக்கப்பட்டிருப்பது போலவே இந்தியா முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று விரும்பினார். பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு உள்ளாட்சி அமைப்புகளில் அளிப்பதற்கான அரசியல் சட்டத்திருத்த மசோதா இராசீவ் காந்தி காலத்தில் உருவாக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் நிறைவேற்றப்படாமல் போயிற்று. 1992 இல் 73 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் நகராட்சிகளிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு செய்யப்பட்டது. அய்ந்து ஆண்டுகளுக்குள் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டது. ஆனால் பீகார் மாநிலத்தில் கடந்த 21 ஆண்டுகளாக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்படவில்லை. பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவதற்கு பீகார் மாநில அரசு சட்டம் இயற்றவில்லை. வரும் ஏப்பிரல் மாதம் பீகாரில்உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

1974 வரையில் நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றங்களுக்கும் பெண்களுக்குத் தனி ஒதுக்கீடு கேட்காத பெண்கள் அமைப்புகள் 1996 இல் முதன் முதலாக இக்கோரிக்கையை எழுப்பின. இதன் பின்னணி என்ன?

1977க்கு முன் வரையில் வட இந்தியாவில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினராகவோ, நாடாளு மன்ற உறுப்பினராகவோ அதிகம் பேர் வர

படிப்பகம்

www.padippakam.com



முடியவில்லை. பார்ப்பனர்கள், இராஜ புத்திரர்கள், பூமிகார், காயஸ்தர் போன்ற மேல் சாதியினரே சட்டமன்ற உறுப்பினர்களாகவும், நாடாளு மன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர் களாகவும், முதலமைச்சர்களாகவும் இருந் தனர். 1980இல் மத்தியப் பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 40. இவர்களில் இரண்டு பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இதேபோல் மேற்கு வங்காளத்தில் 42 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். 1977 இல் மேற்கு வங்காளத்தின் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் 294 உறுப்பினர்களில் 160 பேர் பார்ப்பனர் - காயஸ்தர் போன்ற மேல் சாதியினர்.

ஆனால் 1977, 1980, 1984, 1989 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த வர்கள் தொடர்ந்து அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சமூக நீதிப் போராட்டமும், மண்டல் குழு பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதான வும் போராட்டமும் பிற்படுத்தப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத் தியது. இதற்கு மா.பெ.பொ.க. ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. எனவே பார்ப்பனர்களும் மற்ற மேல் சாதியினரும் ஏகபோகமாய்ச் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்த நிலையில் பெரும் சரிவு ஏற்பட்டு விட்டது. இந்த இழப்பைத் தம்வீட்டுப் பெண்கள் மூலம் ஈடுகட்டவே பெண்களுக்கு நாடாளுமன்றத் திலும் சட்டமன்றங்களிலும் இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை மேல் சாதியினர் 1996 முதல் எழுப்பி வருகின்றனர்.

1996 ஆம் ஆண்டு பெண்கள் அமைப்புகள் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு தர முன்வர வேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தன. 1996 இல் நடைபெற்ற தேர்தலின் போது அய்க்கிய முன்னணி தன் தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கு 33% இடஒதுக் கீடு தருவதாக உறுதியளித்தது. இதன்படி 1996 இல் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களி லும் பெண்களுக்கு33 விழுக்காடு இடஒதுக் கீடு செய்வதற்காக 81 ஆவது அரசியல் சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் முன் மொழிந்தது. ஆனால் அது நிறைவேற்றப்பட வில்லை. நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்புவதென்று முடிவு செய்யப் பட்டது.

மீண்டும் 1998 இல் பா.ச.க. ஆட்சியில் 84 வது சட்டத் திருத்தமாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கட்சிகளும் உறுப்பினர்களும் 33 விழுக்காடு ஒதுக்கீட்டிற்குள்ளாக, வகுப்புவாரியாக ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்; இல்லாவிடில் மேல் சாதிப் பெண்களே மொத்த இடங்களை யும் கைப்பற்றிக் கொள்வார்க்ள் என்று கூறிக் கடுமையாக எதிர்த்தனர். மீண்டும் 1999 டிசம்பர் மாதம் 85 ஆவது அரசியல் சட்டத் திருத்தமாக இது அறிமுகப்படுத்தப்பட்ட போதும், கடும் எதிர்ப்புக் காரணமாக நிறை வேறவில்லை. 2000 டிசம்பர், 21, 22 ஆகிய நாட்களிலும் இம்மசோதா விவாதத்திற்கே எடுத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

பா.ச. கட்சியைச் சேர்ந்த உமாபாரதி, உள் ஒதுக்கீடு கட்டாயம் வேண்டும் என்று கூறி வருகிறார்; சுஷ்மா சுவராஜ் உள் ஒதுக்கீடு கூடாது என்கிறார். தேசிய சனநாயக் கூட்டணியில் உள்ள சமதா கட்சியும், அய்க்கிய சனதா தளமும் இப்போதுள்ள மசோதாவை எதிர்ப்பதுடன் உள் ஒதுக்கீடு வேண்டும் என்கின்றனர். முலாயம் சிங், லல்லு பிரசாத் கட்சிகள் உள் ஒதுக்கீடு தரப்படாமல் இம் மசோதாவை நிறைவேற்ற அனுமதிக்க மாட்டோம் என்று கூறி வருகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



தற்போதுள்ள மசோதாவின்படி பெண்களுக்கான தொகுதிகள் சுழற்சி முறையில் தீர்மானிக்கப்படும். இதன்படி இத் தொகுதிகளில் 2/3 இடங்கள் ஒரு தடவைக்கு மேல் பெண்களுக்கான தொகுதிகளாக இருக்காது. இந்த ஏற்பாடு இதுவரையில் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த மேல்சாதியினர்க்கே உதவுவதாக அமையும். இதுவரை நாடாளுமன்ற (அ) சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் ஒரு முறை மட்டும் தன் மனைவியை வேட்பாளராக நிறுத்தி விட்டால் போதும் - அத் தொகுதியில் மீண்டும் அவரே தொடர்ந்து போட்டியிடலாம். ஒரு முறைக்கு மேல் போட்டியிட வாய்ப்பு இல்லாத நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்கள் ஆர்வமுடன் செயல்பட மாட்டார்கள். மீதி 1/3 பெண் உறுப்பினர்கள் தொகுதிகள் பரிசுச் சீட்டு போல குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும்.

பெண்ணுக்கும் பெண்ணுக்கும் இடையே மட்டுமே போட்டி என்பது சரியான முறையன்று. 1952 முதல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் பெண் வேட்பாளர்கள் வெற்றி விழுக்காடு ஆண்களை விட அதிகமாக இருந்து வருகின்றது. (பட்டியல் விவரம் உகவி நவம்பர், 18-24,2000)

2000 ஏப்பிரல் மாதம் தேர்தல் ஆணையர் எம்.எஸ்.கில் ஒரு கருத்தைக் கூறினார். எல்லா அரசியல் கட்சிகளும் தாமாகவே முன் வந்து 33% தொகுதிகளில் பெண் வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என்றார். இதே கருத்தை 2000 டிசம்பரில் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார். ஆனால் இதைச் செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு அளிக்கப்படக் கூடாது. ஏனெனில் அது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு அல்ல.

சுவீடன், நார்வே போன்ற நாடுகளில் அரசியல் கட்சிகள் தாமாக முன்வந்து 40% இடங்களைப் பெண் வேட்பாளர்களுக்கு ஒதுக்கிட சட்டம் இயற்றி இருப்பது போல் இந்தியாவிலும் செய்ய வேண்டும். அதே சமயத்தில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்ட, பழங்குடியின மதச் சிறுபான்மைப் பெண்களுக்கும் விகிதாசார இடஒதுக்கீடு அதில் அளிக்கப்பட வேண்டும்.

உள் ஒதுக்கீடு பிரச்சினையைப் பிறகு தீர்த்துக் கொள்ளலாம் என்பது ஏமாற்று வாதமாகும்! காங்கிரசு, பா.ச.க., சி.பி.எம். கட்சிகள் உள் ஒதுக்கீட்டை எதிர்க்கின்றன. பெண்கள் மசோதாவைத் தற்போதுள்ள வடிவத்திலேயே நிறைவேற்ற விரும்புகின்றன. ஏனெனில் இக்கட்சிகள் காந்தியம், சுதேசியம், தேசியம், இந்துத்துவம், சோசலிசம் என்று எதைப் பேசினாலும் இவை மேல் சாதியினரின் நலனைக் காப்பவைகளாகவே ஒசெயல்பட்டு வருகின் றன.

உள் ஒதுக்கீடு இல்லாத பெண்களுக்கான இடஒதுக்கீடு பெண்ணுரிமை என்கிற பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் உரிமையைப் பறிப்பதாகும். அவர்களை மேலும் ஒடுக்குவதற்கே வழி வகுப்பதாகும்.

பெண்கள் பெரும் எண்ணிக்கையில் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் இடம் பெறுவதாலேயே பெண்ணடிமைத்தனம் ஒழிந்து விடாது. அரசியலில் ஆணாதிக்கத்தை மட்டுப்படுத்த இது பயன்படும். மதம், சாதி, கலாச்சாரம், பண்பாடு, பண்டிகைகள், திருவிழாக்கள் என்பவற்றின் பெயரால் இறுகிக் கெட்டிப்பட்டுள்ள பெண்ணடிமைத் தளைகளைத் தகர்த்தெறிவதன் மூலமே பெண் விடுதலையைப் பெற முடியும். சாதிகள் உள்ளவரை பிறப்பால் உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்கிற மனப்பான்மை நீடிக்கும். அதுபோலவே தனி உடைமை உள்ளவரை மத ஆதிக்கமும், ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும், உழைப்புச் சுரண்டலும் நீடிக்கும். பெண்ணுரிமை என்பது ஒட்டுமொத்தப் பெண் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

★

தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல்
சுயமரியாதை மாநாடு, வாரீர்! வாரீர்!

www.padippakam.com



# கி.பி 2001

பவழ விழா வெள்ளி விழா

பவழ விழா வெள்ளி விழா

பவழ விழா வெள்ளி விழா

பவழ விழா வெள்ளி விழா

பவழ விழா வெள்ளி விழா

பவழ விழா வெள்ளி விழா

சுயமரியாதை இயக்கத் தோற்றம் **26.12.1926**

சுயமரியாதை இயக்கப் பவழ விழா **26.12.2001**

(75 ஆண்டுகள் நிறைவு - பவழ விழா)

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி தோற்றம் **8.8.1976**

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி - வெள்ளிவிழா

(25ஆண்டுகள் நிறைவு - வெள்ளி விழா) **8.8.2001**

பவழ விழா, வெள்ளி விழா நிகழ்ச்சிகளை மாவட்டந் தோறும் கொண்டாடுவோம்!

எப்படி எங்கெங்கே எப்போது பவழ விழா, வெள்ளி விழா நடத்தலாம் என,

மாவட்டந்தோறும் கூடிப் பேசுங்கள்.

மாவட்டப் பொறுப்பாளர்கள் விரிவான அறிக்கை எழுதுங்கள்!

11.2.2001 பொதுக் குழுவில் உங்கள்

அறிக்கைகளை அளித்திடுங்கள்!

2001 சூலைத் திங்களில் விரிவாகத் திட்டமிட உதவுங்கள்.

சென்னை
1.2.2001

அன்புடன்
வே.ஆனைமுத்து

www.padippakam.com



# இந்துத்துவத் திருடர்களைப் புறங் காணுங்கள்!

★ வேதங்கள் கடவுளால் சொல்லப் பட்டவை.

★ கோவில்களும், மடங்களும், மசூதிகளும், மாதாக் கோயில்களும், குருத்துவாராக்களும் பக்தியைப் பரப்பும் மய்யங்கள்.

★ புராணங்களும் கதைகளும் பாமர மக்களிடம் பக்தியை நிலைக்க வைப்பவை.

இந்தக் கொள்கைகள் எல்லா மதங்களுக்கும் பொதுவானவை.

இதில் மிகப் பெரிய அளவிலான வேறுபாடு 'இந்து மதம்' என்பதற்கு மட்டும் உண்டு. அது என்ன?

★ வேதம் அனாதி காலமாக இருப்பது. அதாவது எப்போது வேதம் சொல்லப்பட்டது என்பது எவருக்கும் தெரியாது. எனவே ரிஷி மூலம், நதி மூலம் கேட்கக் கூடாது.

ஆனால் மற்ற மதங்களுக்கு அப்படி இல்லை. எப்போது, யாரால் வேதம் சொல்லப்பட்டது என அவைகள் சான்று தருகின்றன.

★ இந்துக் கோவில்களிலும் மடங்களிலும் சிலைகள் உண்டு. படித்தவரும் பாமரரும் கடவுளை சிலை வடிவில் பார்க்கவே இந்த ஏற்பாடு.

இதுவும் மற்ற மதங்களில் இல்லாதது.

★ புரோகிதனாகவும், அர்ச்சகனாகவும் பார்ப்பனாகப் பிறந்தவன் மட்டுமே வரவும் - இருக்கவும் முடியும்; மற்றவன் எவனும் எந்தக் காரணத்தாலும் எப்போதும் அர்ச்சக னாக வர முடியாது.

மற்ற மதங்களில் புரோகிதனாக - அர்ச்சகனாக அந்தந்த மதத்தைச் சார்ந்த எவனும் அதற்கான படிப்புத் தகுதியைப் பெற்றுக் கொண்டு வரலாம்.

★ புராணங்களும் மகத்துவக் கதைகளும் எல்லா மதங்களுக்கும் ஒரே மாதிரியானவை.

இந்தத் தன்மையிலான ஏற்பாடுகளை அப்படி அப்படியே காப்பாற்றுவது தான் அந்தந்த நாட்டு அரசின் கடமையாக உளது.

அப்படிப்பட்ட ஓர் அரசை - பார்ப்பன வருணக் காப்பு நோக்குடன் முதன் முதலாக வட இந்தியாவில் நிறுவியவன் புஷ்ய மித்திர சுங்கன் என்கிற பார்ப்பான். அதே தன்மையிலான அரசுகள் தென்னாட்டில் வந்து அமைந்திட வழி கண்டவர்கள் சாளுக்கியர்களும் பல்லவர்களும் சோழர் களும் தெலுங்கர்களும் மராட்டியர்களுமே ஆவர்.

அதாவது கடந்த 2000 ஆண்டுகளாக இப்படிப்பட்ட முயற்சி இந்தியா முழு வதிலும் திட்டமிட்டே செய்யப்பட்டது. இதற்கு முதன் முதலாக ஓர் அடி விழுந்த காலக் கட்டம் கி.மு.300 முதல் கி.பி.700 வரை.

ஆனால் கி.பி.800 இல் முளைத்த ஆதி சங்கரர் அந்த அடியால் விழுந்த சரிவை 15 ஆண்டுகளில் தூக்கி நிறுத்தினார். கடவுள் அருளாலும் பக்தியினாலுமா அது நடந்தது? இல்லை.

ஆங்காங்கே இருந்த அரசுகள் — அரசர்களின் துணை கொண்டுதான் ஆதிசங்கரர் அதைச் செய்ய முடிந்தது.

வடக்கே இஸ்லாமியர் ஆட்சியும், இந்தியா முழுவதிலும் வெள்ளையர் ஆட்சியும் நடந்தது 800 ஆண்டுக் காலம். இந்த 800 ஆண்டுகளிலும், பிற்காலத்தில் 1700 தொடங்கி 1947க்குள்ளும் இந்து மத ஆதிக்கம் - பார்ப்பன ஆதிக்கம் மீண்டும் அடி வாங்கியது. ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



ஆட்சி, ஏற்கெனவே இருந்தது போல், முழுக்க முழுக்கப் பார்பானின் கையில் இல்லை.

எனவே அப்படிப்பட்ட ஓர் ஆட்சியை அமைக்க வேண்டும் என்று, மராட்டியத்தைக் கொள்ளையடித்த பேஷ்வாப் பார்ப்பனர்களும், சித்பவன் பார்ப்பனர்களும் 1890களிலேயே திட்டமிட்டனர்.

1925 இல் அப்படித் திட்டமிட்டவர்களின் வாரிசுகள் தாம் வாஜ்பாயி, அத்வானி, ஜோஷி என்கிற பச்சைப் பார்ப்பன வெறியர்கள். பார்ப்பன மதத்தின் நெஞ்சாங்குலை பார்ப்பனியம். பார்ப்பனியத்துக்கு ஆளாகாத ஓர் ஆள் கூட இந்து மதத்தில் இல்லை. அப்படிப்பட்ட எல்லோரும் இந்தப் பார்ப்பனர் கூடாரத்துக்கு அடிமைகள் ஆயினர்.

1920க்குப் பிறகு அனைத்துப் பிரிவினர்க்கும் கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்புக் கிடைத்தது; மொழி வழி உணர்ச்சி, இனவழி உணர்ச்சி இங்குத் தலை தூக்கியது.

அப்போது தொடங்கியே இவற்றை மட்டந்தட்டிட வேண்டிச் சித்பவன் பார்ப்பனர் என்கிற இருதயம் இல்லாத காட்டு மிராண்டிகள் கண்ட அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ்.

வட மாநிலங்களில் அம்பேத்கரைத் தவிர இவர்களின் சிந்தனைக்கு எதிர்ப்புக் காட்டியவர்கள் எவரும் இல்லை.

தென்னாட்டில் திராவிடர் இயக்கமும், சுயமரியாதை இயக்கமும் இந்து ஆதிக்க - பார்ப்பன மத ஆதிக்கக் கூறுகள் அத்தனையையும் எதிர்த்தன. அந்த எதிர்ப்பு பார்ப்பன மதத்தின் முனையைத்தான் மழுங்கச் செய்தது.

இந்த முனை மழுங்கல் என்கிற நிலையைக் கூடப் பார்ப்பனர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மழுங்கிய முனையைக் கூர்மைப் படுத்துவது, அடி வாங்கியதால் ஏற்பட்ட ஒடுக்குகளைச் சமப்படுத்துவது. பார்ப்பனப் புரோகித ஆதிக்கத்தை முழு வடிவில் மீட்டு அமைப்பது என்கிற திக்கை நோக்கித் திட்டமிட்டே பார்ப்பனர் இப்போது முன்னேறுகின்றனர்.

இந்த முன்னேற்றத்தைத் திட்டமிட்டபடிச் செய்ய ஆட்சி தேவை; அது அவர்களின் தலைமையில், அவர்களின் திட்டத்துக்காக, அவர்களாலேயே அமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

அதற்கான பயிற்சிக்களமாக அவர்களுக்கு 1977-1979 சனதா ஆட்சியும், 1989-1991 சனதா தள ஆட்சியும் அமைந்தன. ஆட்சித் தலைமைகள் மற்றவர்களிடம்; ஆனால் அது ஒரு பயிற்சிக் களம் ஆர்.எஸ்.எஸ் காரர்களுக்கு.

1996இல் ஆட்சித் தலைமையே அவர்களிடம் வந்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று தேர்தல்கள் நடந்தன. மூன்று தேர்தல்களிலும் ஆட்சித் தலைமைக்கு அவர்களையே அமர்த்தினார்கள்- மக்கள் அல்ல, மக்களை மடையர்களாக வைத்திருக்கும் எதிர்க்கட்சியினரும், எதிரிக் கட்சியினரும். இந்த எதிர்க்கட்சியினரையும், எதிரிக் கட்சியினரையும் ஒரு சேரக் காயடித்துவிட்டுத் தங்களின் கட்சி ஆதிக்கத்தை வலிமையாக நிலைநாட்டிக் கொள்ளப் பார்ப்பான் கையில் எடுத்ததுதான், 'அயோத்தி யாவில் இராமன் கோவில் கட்டுவது' என்கிற திட்டம்.

இராமன் ஒரு கடவுள்; இராமாயணம் ஒரு புனிதக் கதை என்று நம்பாதவர்கள் - மதிக்காதவர்கள் இந்துக்களில் 100க்கு ஒருவர்கூட இல்லை. இது இயல்பாகவே பார்ப்பனர்களுக்கு உள்ள மூலபலம்.

இந்த மூலபலத்தை நம்பியே கரையேறிவிட, அதற்கு ஆட்சியை அப்படியே பயன்படுத்த ஏற்றதொரு நளினமான திருடர்தான் வாஜ்பேயி!

75 அகவையிலேயே ஆட்சிச் சுமையால் களைத்துப் போன அவர் - 6/12/2000 தொடங்கி, 13/12/2000 முடிய இராமன் கோயில் சிக்கலை முன் வைத்து - அதனால் நாடாளுமன்றத்திலும், வெளியிலும், ஏடுகளிடமும் வாங்கிய பேச்சும் ஏச்சும் அடியும் பெற்று அயர்ந்து போன அவர், களைப்பைத் தீர்த்துக் கொள்ள வேண்டி, கேரளத்துக் கடலோரத்துக் 'குமரகம்' குடிலுக்குப் போனார்.

குடில்! குடிலா அது? இல்லை. அது குபேரர்களுக்கான ஒரு மாளிகை.

10 ஏக்கர் பரப்பளவில் - 25 கோடி ரூபாயில் வேம்ப நாடு ஏரிக் கரையில் அமைந்தது அக்குடில்! உலகளாவிய கோல்டன் டுலிப்

படிப்பகம்

www.padippakam.com



விடுதிக் குழுமத்தின் ஒரு கூறு அது; எல்லா அதி நவீன வசதிகளும் அமைந்த 22 வீடுகள் கொண்டது அது. தொழில் அதிபர்களான ஃபைசர், பிரிட்டானியா, மாக் டொனால்ட், எஸ்ஸார், மெர்க்ஸ் நிறுவனங்களின் முதலாளிகளும், நிர்வாகிகளும் வந்து தங்கிக் கூத்தடித்துவிட்டுத் திட்டமிடுவதற்குப் பயன்படும் இடம் அது.

அந்தக் குடிலைத்தான் தேர்ந்தெடுத்தார் பிரம்மச்சாரி வேடத்திலுள்ள பிரதமர் வாஜ்பேயி.

குமரகம் நிறுவனம், ஏரியில் மகிழ் உலா வர ஏற்ற பல படகுகளை வைத்துள்ளது. அவை கயிறுகளாலும் மூங்கில்களாலும் கட்டி அமைக்கப்பட்டவை. அப்படிப்பட்ட வற்றில் 80 அடி நீளமுள்ள ஒரு படகை மிக அழகாக - 40 பேர் அமர்ந்து செல்ல ஏற்றதாக அமைத்துள்ளனர். கவித்துவத்தின் காவல ரான வாஜ்பேயி அதிலும் (தத்துப்) பிள்ளைக் குட்டிகள் புடை சூழ, ஏரியில் உலா வந்தார். அவருடைய சிந்தனை சிறகடித்துப் பறந்தது. அவருக்குத் தோன்றிய சிந்தனைச் சிதறல்களை - அவருக்கான பேச்சு எழுத்தர் (Speech writer) - சுதீந்திர குல்கர்னி அப்படியே ஆங்கிலத்தில் வடித்துத் தந்தார்.

அதன் தலைப்பு, 'குமரகத்தில் உருவான என் சிந்தனைகள்'' (My Musings from Kumarakom) என்பது. அதை எழுதித் தந்தவர் குல்கர்ணி; அதை வெளியிடும் பொறுப்பை ஏற்றிருந் தவர் எச்.கே.துவா (H.K.Dua). இவர் 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏட்டின் ஆசிரியராக இருந்தவர். 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' ஏட்டோடு போராடியவர். இப்போது பிரதமரின் அலுவலகத்தில் செய்தித் துறை அறிவுரையாளராக (Media Advisor) இருப்பவர்.

'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏட்டிலே மட்டும் 2/1/2001இல் வாஜ்பேயியின் எழுத்துகளை வெளிப்படுத்த வேண்டும் என்பது அவருக்கு உள்ள கடமை. ஆனால் ஆசை வெட்க மறியாது என்பதால் அக்கட்டுரையின் முழுப்படியை 20 ஏடுகளுக்குத் தந்தனர்; நான்கு செய்தி நிறுவனங்களுக்கும் தந்தனர்.

அந்தக் கட்டுரையில் என்ன சிறப்பு?

ஒரே ஒரு சிறப்புத் தான்.

''அயோத்தியாவில் கோவில் கட்டப் படுவது என்பது தேசிய உணர்வின் வெளிப் பாடாக இருந்தது *(was)* என்று தான் நான் சொன்னேன். இருந்தது என்று இறந்த கால வினைச் சொல் போட்டு நான் சொன்னதை எவருமே கணக்கில் கொள்ளாமல் என் எண்ணத்தைத் தவறாகவே புரிந்து கொண்டார்கள்'' **(In the temple issue, Mr.Vajpayee complained that the past tense in his controversial observation - that the movement for construction of a Ram temple at Ayudha *was* an expression of the national sentiment - was over looked and his stand misreprsented).**

'இருந்தது' - "Was' என்று தான் நான் குறிபிட்டேனே தவிர, 'இருக்கிறது', 'இருக்கும்' என்று குறிப்பிடவில்லையே என்று சொற்சிலம்பம் ஆடுவது (Punning upon words) ஒரு பிரதமர் என்கிற பொறுப்பான மனிதர் செய்கிற வேலையா? இது ஒரு குடிகாரனின் கூற்றுப் போன்ற தல்லவா? இவரும் ஒரு வேளை அப்படித்தானோ?

சரி!

'இருந்தது' என்று சொல்லி, இன்னமும் தன் உண்மையான எண்ணத்தைப் பிரதமர் மறைக்க விரும்புகிற அதே நேரத்தில், ஆர்.எஸ்.எஸ், விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள், இந்து முன்னணி என்கிற இவர்களின் கிளை அமைப்புகள் கூறுவது என்ன?

''அயோத்தியா பற்றிய சிக்கலை மீண்டும் விவாதத்துக்கு உரியதாகக் கொள்ள வேண்டியதில்லை என்று பிரதமர் கூட்டணிக் கட்சிகளுக்கு விளக்கம் அளித்து விட்டார். நீதி மன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்படுவோம் என்று திரும்பத் திரும்பப் பிரதமர் உறுதி கூறிவிட்டார்'' என பாரதிய சனதாக் கட்சியின் தலைவர் பங்காரு இலட்சுமணன் விளக்கம் தந்துள்ளார்.

அதே மூச்சில், அவரே ''அயோத்தி யாவில் கோவிலைக் கட்டுவதைப் பற்றிய ஒரு முடிவை அலகாபாத்தில் நடக்கப் போகும் கும்பமேளாவில் அறிவிப்போம் என்று விசுவ இந்து பரிசக் கூறுவதை மறு ஆய்வு செய்ய வேண்டுமென அவ்வமைப்பினைக் கேட்டுக் கொள்ளுகிறோம்'' எனவும் கூறியுள்ளார். (''இந்து'' 3-1-2001)

பங்காரு இலட்சுமணன் புதுதில்லியில் இப்படிக் கூறியது 2-1-2001இல்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், அதே 2-1-2001 இல் இராசஸ் தானிலிருந்து அலகாபாத்திலுள்ள பிரயா கையை நோக்கி, இனி அமையப் போகும் இராமர் கோவிலின் மாதிரிக் கட்டடம் கொண்டு செல்லப்பட்டது. (''இந்து'' 3-1-2001)

எது நடக்கக்கூடாதது என்று பா.ச.க. கருதுகிறதோ, அதை நடத்தியே தீருவது என்று சூளுரைத்து, இரண்டாண்டுகளாகக் கற்களையும் தூண்களையும் செதுக்கி வடிவம் அமைத்து, அவற்றை அயோத்தி யாவுக்கே அனுப்பிவிடவும், அங்கே பாதுகாப்பாக இறக்கி வைக்கவும் அரசு அனுமதித்ததற்கு என்ன பொருள்?

அயோத்தியில் எப்படிப்பட்ட வடிவில் கோவில் அமையும் என்பதை - கும்பமேளா வின் போது கூடுகிற கோடிக்கணக்கான மக்களுக்குக் காட்சிக்கு வைக்க என்று கோயிலின் மாதிரிக் கட்டடத்தை அனுப்பிட அரசு அனுமதித்ததற்கு என்ன நோக்கம்?

இது அரசின் திருட்டுத்தனம் அன்றி வேறு என்ன?

இவற்றை அனுமதித்துக் கொண்டே ஆட்சியில் நீடிக்கத் திட்டமிடுகிற பாரதிய சனதாக் கட்சி திருட்டுக் கட்சி என்பதிலும்; பிரதமரும், உள் துறை அமைச்சரும் திருட்டும் கபடமும் உள்ளவர்கள் என்பதிலும் யாருக்கு, எப்படி, ஏன் அய்யப்பாடு இருக்க வேண்டும்?

விசுவ இந்து பரிசத் என்பது ஆர்.எஸ்.எஸின் கிளை அமைப்புகளில் ஒன்று என்பது உலகம் அறிந்த செய்தி. இவர்கள் இப்படிச் செய்வதை ஆர்.எஸ்.எஸின் அரசியல் கிளையான பா.ச.கவும் பிரதமரும் அனுமதிப்பது பச்சையான கள்ளத்தனம் அல்லாமல் வேறு என்ன? இந்தக் கள்ளத்தனத்தைப் பார்த்துக் கொண்டே பா.ச.கவின் கூட்டாளிகளான கூட்டணி உறுப்புக் கட்சிகள் வாய் மூடிக் கிடப்பது எப்படிச் சரியாகும்?

ஆர்.எஸ்.எஸ் தலைவரான கே.எஸ் சுதர்சன், 'இந்த நாட்டைச் சார்ந்தவர்கள் என்கிற உணர்வு வருவதற்காக, 'இந்தியத் தனித்துவத்துக்கு' ஏற்றதாகக் கிறித்துவம் வடிவமைக்கப்பட வேண்டும்' என்று தொடர்ந்து கூறுவதும்; குசராத், மத்தியப் பிரதேசம், உ.பி., பீகார், அசாம் முதலான மாநிலங்களில் கிறித்துவர்களும், மாதா கோவில்களும், கிறித்துவக் கல்வி நிறுவனங் களும் நாள்தோறும் தாக்கப்படுவதும் அவமானப் படுத்தப்படுவதும் திட்ட மிட்ட இந்துத்தவத் திணிப்பு அன்றி வேறென்ன?

இதை ஊக்குவிக்கும் தன்மையில், 'மதமாற்றம் பற்றி நாடு தழுவிய விவாதம் நடைபெற வேண்டும்' என்று பிரதமர் கூறுவது ஏன்? இந்தக் கொள்கையை அறிவித்த ஆக்ரா ஆர்.எஸ்.எஸ் மாநாட்டில் கிஷன் லால் அத்வானி பங்கேற்றது ஏன்? தன் இந்துத்துவ வெறிக்கு ஆக்கம் தேடும் அத்வானி உள்துறை அமைச்சராக இருப்பது எப்படி முறையாகும்?

கிறித்துவர்கள் சனவரி 1 அன்று புத்தாண்டு நாள் கொண்டாடுவதும், வெலெண்டைன் விழாவைக் கொண்டாடுவதும் இந்தியாவின் மதச் சார்பற்ற தன்மைக்குப் புறம்பானது என்றும், பெரும்பான்மை மக்களின் தேசியப் பண்பாட்டுக்கு இது எதிரானது என்றும் விசுவ இந்து பரிசத் தொடர்ந்து பறைசாற்றுவதை தேசியக் கூட்டணி ஆட்சியின் தலைவர் வாஜ்பேயி அனுமதிப்பதற்கு என்ன பெயர்?

இந்தியாவில் எது மதச்சார்பின்மை? ஏது மதச் சார்பின்மை? இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 'மதச் சார்பின்மை' என்பதற்கு எங்கே விளக்கம் இருக்கிறது?

1973 இல், கேசவானந்த பாரதி வழக்கில், நீதிபதி எச்.ஆர். கன்னா சொன்ன ஒரே விளக்கம்-'' எந்த ஒரு குடிமகனிடத்தும் மத அடிப்படையில் அரசு வேறுபாடு காட்டக் கூடாது'' என்பதுதான். இது அவருடைய விளக்கமே அன்றி, சட்டத்தில் அப்படி ஏதும் இல்லை.

பிரதமர் இந்திரா காந்தி, 1972இலும், 1976-1977 இலும் சொன்ன விளக்கம் ''எல்லா மதங்களையும் ஒன்று போல் பாவித்தல்தான் மதச் சார்பின்மை'' என்பது மட்டுமே.

இதை, அன்றே மறுத்துக் கூறிய தந்தை பெரியார், ''எல்லா ஆண்களையும் தன் கணவனைப் போல் கருதுவது தான் ஒரு பெண் பதி விரதை என்பதற்கு அடையாளம் என்று கூறுவதற்கே இது ஒப்பாகும்'' என்றார்.

படிப்பகம்

www.padippakam.com



''மதச்சார்பின்மை'' என்கிற கருத்தியலை முதன் முதலில் உருவாக்கியவன் அரசியலி லிருந்தும் கல்வியிலிருந்தும் மதத்தை நீக்கு என்றே (1860களில்) சொன்னான். அதைத் திரித்து இப்படிக் கூறுவதுத் தவறு என்பதைப் பெரியார் மட்டுமே ஓங்கி உரைத்தார். (அவரை அடியொற்றி, 24-12-74இல், அவ்விளக்கம் பற்றிப் பெரியார் திடலில் என் உரையில் முதன் முதலாக விளக்கினேன்).

1978 இல் சனதா ஆட்சியில் இந்திய அரசு இதற்குத் தந்த விளக்கம் என்ன? 'எல்லா மதங்களையும் ஒன்று போல் பாவித்தல்' என்று காங்கிரஸ் தந்த அதையேதான் சனதாக் கட்சியும் ஏற்றது.

இதில் காங்கிரஸ் மற்றும் சனதாக் கட்சியினர் வெளிப்படையான திருடர்கள்; பாரதிய சனதாக் கட்சியினர் முக்மூடி போட்ட திருடர்கள் என்பதே உண்மை. எல்லோரும் பார்ப்பனரை - பார்ப்பனியப் பண்பாட்டை - இந்துத்துவ ஆதிக்கத்தை அப்படியே நிலைக்க வைக்க விரும்புகிறவர்களே.

பாரதிய சனதா தலைமையிலான இன்றைய ஆட்சி இந்த ஒன்றை மட்டும் நிலை நாட்டுவதை உயிரான கொள்கையாகவே கொண்டு செயல்படுகிறது.

எப்படி?

பண்பாட்டு அடிப்படையிலான கல்வித் திட்டம் (Traditional value based education) என்கிற பெயரால், பள்ளிக் கல்வித் திட்டத்தில் சமஸ்கிருதம் ஒரு கட்டாயப் பாடமாக்கப்படும் என்று மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி மிக உறுதியாகவும் வலிந்தும் கூறுகிறார்.

''சமஸ்கிருத மொழிப் பாடத்தைக் கட்டாயமாக ஆக்க வேண்டும் என்று நீங்கள் ஏன் வலியுறுத்துகிறீர்கள்?'' என்பது வினா.

''சமஸ்கிருதம் பரந்த அறிவுக் களஞ்சி யத்தின் திறவு கோல். அதைப் பயிற்றுவிக்க வேண்டும் என்று இராதா கிருஷ்ணன் குழு பரிந்துரைதுள்ளது.'

இது ஜோஷியின் விடை. ("Sunday Express"), 7-1-2001, page 7). முரளி மனோகர் ஜோஷி இத்துடன் நிற்கவில்லை.

வேதம், சோதிடம் இவற்றைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களில் இடம் பெற வைத்திட அரசு எல்லாம் செய்யும் என்று முனைப்புடனேயே கூறிவிட்டார். பல்கலைக் கழக நிதிக்குழு (UGC) வினர் என்கிற வயிற்றுப் பாட்டுக்கான படித்த திருட்டுப் பயல்களும் இதை விழுந்து விழுந்து ஆதரித்து விட்டனர்.

இந்தப் போக்குக்கு, 75 ஆண்டுகளுக்கு முன்னரே, முதல் அடி கொடுத்தவர்கள் மேதை பனகல் அரசர், தந்தை பெரியார், அறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகிய பெருந்தலைவர்கள் ஆவர்.

1920 களில் பழைய சென்னை மாகாணத்தில், மருத்துவப் படிப்பில் சேருவதற்கு, சமஸ் கிருதம் படித்திருக்க வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. இது திராவிட இனமக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை என்பதை நேரில் அன்றைய முதலாவது அமைச்சர் பனகல் அரசரிடம் விளக்கிச் சொல்லி, 1925லேயே சமஸ்கிருதப் பாடம் நீக்கப்பட வழி கண்டனர்- தந்தை பெரியாரும், கி.ஆ.பெ.விசுவநாதம் அவர் களும்.

இன்று, இந்த மாபெருந்தலைவர்களின் கால் வழி வந்த பிறங்கடைகள், வாயில் பெரிய பெரிய கொழுக்கட்டைகளைத் திணித்துக் கொண்டு வாய் மூடிக் கிடக்கிறார்கள். அந்தோ, வந்துவிட்டது ஆபத்து! தடுக்க வழிதான் என்ன? நிற்க.

சோதிடம், சகுனம், நல்ல நாள், கெட்ட நாள் பார்த்தல்; திதி, கருமாதி, கழிப்பு, பூசை, திருவிழா, குட முழுக்கு என்கிற சடங்கு களைச் செய்பவன் தான் புரோகிதன்.

இது கொழுத்த வருமானம் தருகிற - தலைமுறை தலைமுறையாகப் பார்ப்பானை மட்டும் வாழ வைக்கிற ஒரு தொழில் (craft); முதல் இல்லாத - மக்களின் மூடத் தனத்தை முதலீடாக வைத்த ஒரு தொழில்.

இவற்றை அடியோடு 1872 இலேயே கண்டனம் செய்தவர் கவிஞர் அத்திப்பாக்கம் அ.வெங்கடாசல நாயகர்.

அவர் கூறுகிறார்: ''நாள் பார்க்கிறதிலும், பொருத்தம் பார்க்கிறதிலும், சாதக மெழுதுகிறதிலும், சோசியம் கேட்கிறதிலும்

படிப்பகம்

www.padippakam.com



ஒரு பிரயோசனமுமில்லை. இதுகளை யெல்லாம் முக்கியமாகச் சொந்தத்திற்குப் பார்த்துக் கொள்ளுகிற பார்ப்பார் வீடுகளில் நாலு பெண்ணுக்கு மூன்று பெண் விதவை களாகி அந்தச் சாதியில் விஸ்தாரம், விதவை களாயிருக்கிறார்கள்..." எனப் பிட்டுப் பிட்டுக் கூறியுள்ளார். இவர் 1882 இல் எழுதிய "இந்து மத ஆசார ஆபாச தரிசினி" என்ற பாடல் நூலை 1930 இல் கண்ட தந்தை பெரியார், மனம் பூரித்து, அது குறித்து, "அய்ம்பது ஆண்டு களுக்கு முன் சுயமரியாதை இயக்கம்" எனத் தலைப்பிட்டுப் பெருமிதத் துடன் 'குடி அரசு' ஏட்டில் அறிவித்தார்.

இந்தப் பெருமக்களின் பேருழைப்பால் மரியாதையும், படிப்பும், வேலையும், வாழ்வும் - ஏன் பதவியும் பணமும் குவிக்கிற பன்னூறாயிரம் திராவிடத் தமிழர்கள், வாஜ்பேயி, அத்வானி, ஜோஷி என்கிற முகமூடித் திருடர்களின் சோதிடம் பற்றிய உள் எண்ணத்தைப் புரிந்த பின்னும் இதுபற்றி வாளாயிருப்பது ஏன்? ஏன்?

இத்துடன் நின்றதா பார்ப்பனக் கொட்டம்? இல்லை.

பாரதிய சனதாக் கட்சியை முதன் முதலா கத் தோளில் சுமந்து தமிழ்நாட்டு ஊர் தோறும் தூக்கிச் சென்றவர்கள் அ.இ. அ.தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. வினர். இவர்கள் தி.மு.க.விலிருந்தும், வன்னியர் சங்கத்தி லிருந்தும் கிளைத்தவர்கள்.

இவர்கள் இறக்கி வைத்த பல்லக்கை - இவர்களில் பா.ம.க., ம.தி.மு.க., வினரை மட்டும் சேர்த்துக் கொண்டு, முட்டித் தூக்கி இன்று தமிழ்நாட்டுத் தெருத்தோறும் வலம் வருகிறவர்கள் தி.மு.க.வினர். இவர்கள் தி.க.விலிருந்து முதன் முதலாகக் கிளைத் தவர்கள்.

இவர்களே பல்லக்குத் தூக்கிகளாக ஆகிவிட்ட நிலையில், தமிழ்நாட்டுப் பாரதிய சனதாப் பார்ப்பனர்களுக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரையில் குளிர்ந்து திமிரேறி விட்டது.

தமிழ்நாடு பாரதிய சனதாக் கட்சியின் பொதுச் செயலர் இல.கணேசன், 'தமிழ்நாடு கிளை, தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலில் தனியாகத் தேர்தல் அறிக்கை வெளியிடும்' என்று 5/1/2001 அன்று அறிவித்துள்ளார். அப்படி அவர்கள் செய்வது அவர்களின் உரிமை எனத் தமிழ்நாட்டு முதலமைச்சர் கூறியுள்ளார்.

இல.கணேசன் தம் அறிக்கையில் வெளியிட் டுள்ள முதன்மையான செய்தி என்ன?

"தி.மு.க. தனித்து ஆட்சி அமைக்கும். அதனால் பொதுவான தேர்தல் அறிக்கைக்கு அவசியமில்லை. பா.ச.க. தனியாகத் தேர்தல் அறிக்கை வெளியிடும். எது மதச் சார்பற்ற தன்மை என்பதை மக்களுக்கு விளக்குவோம். அரசாங்கத்தின் பிடியிலிருந்து ஆலயங்களை மீட்டுக் கடவுள் நம்பிக்கையுள்ள பெரியவர்கள் தலைமையில் தனிப்பட்ட அமைப்பின் கீழ்க்கொண்டு வருவதைத் தேர்தலில் முக்கியப் பிரச்சினையாக எடுத்துக் கொள்வோம்...". ("தினமணி" 6-1-2001).

இந்து மதக் கோவில்கள், மடங்கள் இவை பார்ப்பனர்களின் - அர்ச்சகர்களின் கொள்ளைக் கூடங்களாக விளங்கின. இதைத் தடுத்து நிறுத்த வேண்டி ஒரு தனி ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி) 1917 இல் கோவையில் நடைபெற்ற மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதற்கென ஒரு சட்ட முன் வடிவை அரும்பாடுபட்டு உருவாக்கி 1922இல், ஆட்சியில் இருந்த போது, வெளியிட்டனர்.

அன்று தொடங்கி 1926 வரையில் நான்காண்டுக் காலம் லௌகிக (அரசியல்)ப் பார்ப்பனர்களும், ஆன்மிகப் பார்ப்பனர் களும், தேசிய காங்கிரஸ் பார்ப்பனர்களும், 'இந்து' 'சுதேசமித்திரன்' பார்ப்பன ஏடுகளும் நீதிக் கட்சியின் அந்த அரிய முயற்சியைக் கடுமையாக எதிர்த்தனர்; வானத்துக்கும் தரைக்கும் எகிறிக் குதித்தனர்; தில்லி வரையில் சென்று போராடினர்.

சமஸ்கிருதப் பேரறிஞராகவும், புடம் போட்ட நேர்மையாளராகவும் விளங்கிய அன்றைய முதலாவது அமைச்சர் பனகல் அரசர், தலைவர் சர்.பிட்டி தியாகராயர், பேரறிஞர் ஆர்க்காடு இராமசாமி ஆகியோர் சைவ மடாதிபதிகளின் - பார்ப்பனரின் எல்லா எதிர்ப்புகளையும் புறங்கண்டு, 1925 இல் இந்து மத அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை நிறைவேற்றினர்.

தந்தை பெரியார் காங்கிரசில் இருந்த போதே, கோவை காங்கிரஸ் மாநாட்டில், 1914 இலேயே, இந்து மத தர்ம பரிபாலனம் பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருப்பதை

படிப்பகம்

www.padippakam.com



நினைவூட்டி, *17-12-1925*இல் கோவையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பின்வருமாறு பேசியிருக்கிறார்.

''தேவஸ்தான சட்டமானது நமது நாட்டில் வெள்ளைக்காரர் வந்தபின்புங்கூட, அதாவது *1817-1863* வருடங்களிலேயே, இந்துமத தர்ம, பரிபாலனத்தைப் பற்றி, சர்க்காரார் என்கிற முறையில் சட்டம் செய்திருக்கிறார்கள் என்றும்; அந்தச் சட்டம் போராதென்றும், இனியும் கண்டிப்பான சட்டங்கள் செய்யவேண்டுமென்றும், அநேக வருஷங்களாக காங்கிரஸ் கான்பரன்ஸ் முதலிய ராஜீய மாநாடுகளின் தீர்மானங்ள் மூலமாகச் சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமென்றும், *1914*ஆம் வருடத்திய கோயமுத்தூர் ஜில்லா கான்பரன்ஸிலும் கூட ஒரு தீர்மானம், இதைப் பற்றி ஸ்ரீமான் பி.வி.நரசிம்ம ஐயரால் பிரேரேபிக்கப்பட்டு தீர்மானமாயிருப்பது தமக்கு ஞாபகமிருக்கிறதென்றும், ஜஸ்டிஸ் கட்சியார் இந்தச் சட்டத்தைச் செய்தார்களென்கிற காரணத்திற்காக அதைச் சிலர் தூற்றுவதற்கு நாம் காது கொடுப்பது பைத்தியக்காரத்தனமென்றும்... மதத்தின் பேரால் வசூல் செய்யப்படுகிற கோடிக்கணக்கான ரூபாய்களைச் சரிவரச் செலவழிப்பதற்குக் கணக்குக் கேட்காமலிருக்கக் கூடிய அவ்வளவு யோக்கியர்களாக நாம் நமது மடாதிபதிகளையும், மகந்துகளையும், பூசாரிகளையும் அடையத் தகுந்த நிலைக்கு வந்து விட்டோமா என்றும்...'' வினா எழுப்பி, விரிவானதொரு உரையை ஆற்றியிருக்கிறார். *(''குடி அரசு'', 27-12-1925)*.

அதே ஆண்டில் திருப்பதி வெங்கடாசலபதி கோவிலுக்கு ஆண்டு வருமானம் *18* இலட்ச ரூபாய் என்பதைச் சுட்டிக்காட்டி, இதை மகந்துகளும் அர்ச்சகர்களும் கொள்ளையடிப்பதை அவரே கண்டனம் செய்துள்ளார்.

22-11-25 முடிய காங்கிரசிலிருந்த ஈ.வெ.இரா. அவர்களை அப்போதே நீதிக் கட்சியின் பால் நாட்டங் கொள்ளச் செய்தவை அக்கட்சியின் செயல்பாடுகளும், அக்கட்சித் தலைவர்களின் தன்னலமற்ற தன்மையுமே ஆகும்.

சர்.பி.தியாகராயர், டாக்டர். டி.எம்.நாயர், பனகல் அரசர், சி.நடேச முதலியார் ஆகியோரின் தன்னிகரற்ற, தன்னலமற்ற சேவை அவர் நீதிக் கட்சியின்பால் கொண்ட நாட்டத்துக்கு முதலாவது காரணம்.

நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் வகுப்பு வாரி உரிமையை நடப்புக்குக் கொணர்ந்தது இரண்டாவது காரணம்.

நீதிக்கட்சி 1925 இல் நிறைவேற்றிய இந்துமத அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் மூன்றாவது காரணம்.

இந்தச் சட்டத்தை அன்று கட்டுப்பாடாக எல்லாப் பார்ப்பனர்களுமே .எதிர்த்தனர். அவர்களுக்குத் திட்பமான எதிர்ப்புக் காட்டி முறியடித்தவர், பெரியார்.

இன்றும் அதே பணிக்கு நம்மைப் பார்ப்பனர் இழுக்கின்றனர்.

பார்ப்பனரின் அகம்பாவமும் ஆணவமும் நீடித்திட அடிப்படை என்ன என்பதை இப்போதேனும் நம்மவர் எல்லோரும் மனங் கொண்டு உணர்ந்து, பார்ப்பனரல்லாதார் அனைவரும் மனித உரிமையும் தன்மானமும் பெற்றிடப் பாடு பட வேண்டும்.

ம.தி.மு.க.வின் அதிகார முறை கிழமை ஏடான ''சங்கொலி'' *(19.1.2001)* இதுபற்றி இத்தன்மை யான எதிர்ப்பைக் காட்டியுள்ளது பாராட்டத் தக்கது. நிற்க.

இன்று நமக்கு மனித உரிமையும் இல்லை; மானமும் இல்லை.

இது உண்மை. எப்படி?

(1) பார்ப்பானாகப் பிறந்தவன் மட்டுமே சைவ - வைணவக் கோயில்களில் ஆகம விதிப்படி, அர்ச்சகனாக வர முடியும்.

(2) பார்ப்பானாகப் பிறந்தவன் மட்டுமே - கார்காத்த வேளாளனாகப் பிறந்தவன் மட்டுமே - தொண்டை மண்டல துளுவ வேளாள முதலியாராகப் பிறந்தவன் மட்டுமே - இலிங்கக் கட்டியாகப் பிறந்தவன் மட்டுமே, அந்தந்தச் சாதியாருக்கான மடங்களுக்கு மடாதிபதியாக வர முடியும்.

1.2.2001 இலும், நாளைக்கும் அரசமைப் புச் சட்டப்படியும், இந்துச் சட்டப்படியும், ஆகமங்களின் படியும், 1947க்கு முந்தைய இலண்டன் பிரிவி கவுன்சில் தீர்ப்புகளின் படியும் இந்த ஏற்பாடும்; பார்ப்பான், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நால் வருணப் பிறவி வேற்றுமையும் இன்றும் செல்லும்; செல்லும்; செல்லும்.

இந்த இழிவை 97% மக்கள் பேரில், பிறவி அடிப்படையில் இன்றும் சுமத்திக் கொண்டிருப்பவை இந்து மதக் கோவில்

படிப்பகம்

www.padippakam.com



களும், சைவ வைணவ மடங்குகளுமே. வேறு எந்த இடத்திலும் இது இல்லை; இல்லை; இல்லை;

இந்த இழிவை நிலை நாட்டுவதையும் தக்க வைத்துக் கொண்டு, இவற்றின் மூலம் வரும் பணச் செல்வத்தையும் ஆளுமை செய்து கொள்ளையடிப்பதையும் 'கடவுள் நம்பிக்கை யுள்ள பெரியவர்கள்' என்கிற போர்வையில் பார்ப்பானும் - சைவ வேளாளனுமே செய்ய வேண்டும் என்பதே தமிழக் பா.ச.க வரப் போகும் தேர்தல் அறிக்கையில் முன் வைக்கப் போகும் ''முக்கியப் பிரச்சினை'' என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பார்ப்பானின் உச்சிக் குடுமியை வெட்ட வேண்டும்; பூணூலை அறுக்க வேண்டும் என்ற உணர்ச்சியை விதைத்து 1926 முதல் 1969 வரை தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும் பெரியார் செய்த ஓயாத பரப்புரையால் உணர்வு பெற்றவர்களில் நூற்றுக்கணக்கினர் வட நாட்டிலும், பல்லாயிரக் கணக்கினர் தமிழ் நாட்டிலும் இன்றும் உயிரோடு உள்ளனர்.

இவர்களில் எவரும் பெரியார் உண்மையில் எதிர்பார்த்தபடி, ''பார்ப்பா னைக் கொல்ல'' ஆயத்தம் ஆகவில்லை. பெரியார், தம் மறைவுக்குப் பிறகு எங்கே அப்படி நேர்ந்து விடுமோ என அஞ்சினார்; மனதார அஞ்சினார். எனவேதான், ''பார்ப்பனத் தோழர்களே! திருந்துங்கள்!'' என வினய மாகவே இருதடவைகள் பார்ப்பனர்க்கு வேண்டுகோள் விடுத்தார். இது கோழைத் தனம் அன்று - அறிவாண்மையின், மனிதத் தன்மையின் பேராயுதம் - சம உரிமையின் அருஞ்சின்னம். ஏன்?

எந்த மனிதனைக் கொல்லுவதனாலும், எந்த அமைப்பும், சித்தாந்தமும் அழிந்து விடாது.

இங்கு உள்ள சமூக அமைப்பு யாது? - ஒரே இந்தியா; இந்துத்துவமே இந்தியப் பண்பாடு என்பவை.

இந்த அமைப்புகளைத் திட்டமிட்டு அழிப்பது என்பது என்ன?

இந்த அமைப்புகளைக் காப்பாற்றிக் கொண்டி ருக்கிற இந்திய அரசு என்கிற கருவியைக் கைப்பற்றுவதுதான்.

நம் அறிஞர் அண்ணா அதற்காகத் தானே ''அரசியலில்'' நுழைந்தார் என்று நம்மில் பலரும் கருதலாம்.

அந்த நோக்கம் உள்ள அவர், பெரியார் சரியாகவே சிந்தித்தபடி, அனைத்திந்திய அளவில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தைக் கட்டியெழுப்பி, வலிமை வாய்ந்த ஏடுகளை நிறுவி, உண்மையான ''அரசு'' — "State" என்கிற இந்திய ஆட்சிக் கருவி எல்லா மக்களுக்கும் - எல்லா உரிமைகளையும் வழங்க வல்லதாக ஆக்கப்பட, வழி கண்டிருக்க வேண்டும்.

அதை விடுத்து, இன்று அமைக்கப் பட்டுள்ள பழைய - பழமைக் காப்புக் கருவியாக இருக்கிற 'அரசு' என்கிற உருளைக் கருவியில் தாங்களும் சில பற்களாக இருக்க மட்டுமே ஆயத்தமாவதும், அதுவே ''அரசியல்'' என்று கொள்ளுவதும் பார்ப்பானுக்கும் - பணக்காரனுக்கும் - பன்னாட்டுச் சுரண்டல் காரர்களுக்கும் பண்ணையடிக் கவும், அவர்களிடம் புல்லிளித்துச் சேவை செய்யவும் வயிறு வளர்க்கவும் மட்டுமே பயன்படும்.

1956 திருச்சி மாநாட்டில், 1957 தேர்தலில் போட்டியிடுவது என, தி.மு.க. முடிவெடுத்தது. அம்மாநாட்டுக்கு நானும் சென்றிருந்தேன். அறிஞர் அண்ணாவின் உரை உட்பட அனைவருடைய உரைகளையும் ஆர்வத்துடன் கேட்டேன். ஆனால்...

''பெரியாரின் கொள்கைகளுக்குச் சட்ட வடிவம் தருவதற்குத் தான் சட்டமன்றத் துக்குப் போக முடிவெடுத்தோம்'' என தி.மு.க அறிவித்ததைக் கொஞ்சமும் என்னால் ஏற்க முடியவில்லை.

ஏன்?

இன்றைக்கு இருக்கிற அரசியல் அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு, அதற்குக் கட்டுப்பட்டு நடக்கிற எந்த மாநில அரசும், எந்தக் கட்சியின் தலைமையிலான இந்திய அரசும் பெரியாரின் கொள்கைகளை ஒருக்காலும் நிறைவேற்ற முடியாது; முடியாது. ஆனால், பார்ப்பான் ஆதிக்கத்தைக் காத்திட முடியும்.

இதை அன்றே நான் தெளிவுபட எழுதினேன்.

''அண்ணாத்துரைக்கு சவால்!'' (1,2); ''தேர்தல் கூத்தாடிகள் திரை கிழிகிறது'' (1,2) என்கிற தலைப்புகளில், 1957 பிப்ரவரி - மார்ச்சுத் திங்களில், ''குறள் முரசு'' என்னும் என்னுடைய

படிப்பகம்

www.padippakam.com


கிழமை ஏட்டில் நான் எழுதிய - அரசமைப்புச் சட்ட விளக்கங் களோடு கூடிய கட்டுரைகள் இவை.

இன்று இருக்கிற ஆட்சிப் பல்லக்கில் ஏறிக் கொள்ள வாஜ்பேயிக்கு உதவியும் உறுதுணையும் செய்தவை - செய்து வருபவை திராவிடக் கட்சிகளும், மற்ற தமிழகத் தமிழர் கட்சிகளும்; ஆந்திர, வங்காளக் கட்சிகளுமே ஆகும். இது மாபெரும் அவமானம்; மாளாத அவலம்.

இந்த நிலையில், ஏறிய ஆட்சிப் பல்லக்கிலிருந்து இறங்காமல் இன்னும் நான்காண்டு களுக்கும், அதன் பின்னும் அய்ந்தாண்டு களுக்கும் தொடர்ந்து பதவியில் இருக்க வழிகாண வேண்டியே, இந்திய அரசமைப்பு மறு ஆய்வுக் குழு அமைக்கப் பட்டு விட்டது, பா.ச.க அரசினரால்.

இத்தகைய கொடுஞ் செயலின் தேவை பற்றி விளக்கி வெட்கமும் மானமும் பொறுப்பும் அறிவும் இன்றி, தில்லியில், 17.1.2001 இல் நடந்த தேர்தல் பணிக் குழு (Election Commission)வின் பொன்விழா ஆண்டு நிறைவை ஒட்டிய நிகழ்ச்சியில் பிரதமர் வாஜ்பேயி கருத்து வெளியிட்டுள் ளார்.

குடி அரசுத் தலைவர், மக்களவைத் தலைவர், அரசமைப்பு மறு ஆய்வுக்குழுத் தலைவர், அரசு உயர் அலுவலர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், தேர்தல் பணிக் குழுவினர் ஆகிய இவ்வளவு பேர்களையும் வைத்துக் கொண்டு இந்தக் கோரிக்கையை அவர் முன் வைத்ததன் நோக்கம் என்ன?

இன்னும் நான்கு ஆண்டுகளுக்குக் கொள்ளையடிக்க இருக்கிற நல்ல வாய்ப்பை இழக்க விரும்பாத 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள்; தம் தம் மாநிலத்தில் ஆட்சி செய்வதன் மூலம் சொத்துச் சேர்க்க இருக்கிற வாய்ப்பினை இழந்துவிட விரும்பாத பாழும் மாநிலத் தலைவர்கள் ஆகிய இவர்களைக் கொண்டே கி.பி. 2005 வரையில் ஆட்சியில் நீடித்துவிடுவதும்; அதற்குள்ளேயே பெரிய அளவுக்கு இந்துத்துவ - இந்து மத - பார்ப்பன ஆதிக்கத்தை எல்லாத் துறைகளிலும் கெட்டியாகக் கட்டமைத்துக் கொள்ளு வதுமே வாஜ்பேயி - அத்வானி முதலான இந்துத்துவ வெறியர்களின் உள் நோக்க மாகும்.

இத்தன்மையில், ''நிலைத்த ஆட்சி'' (Stability) என்பதைக் குறி வைத்து, 'நாடாளுமன்ற ஆயுள் காலம் அய்ந்தாண்டுகள் என ஆக்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதை' மறைமுகமாக, இந்தியக் குடி அரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் தம் குடி அரசு நாள் உரையில் கண்டனம் செய்தார்.

இதை மிகவும் கடுமையாகக் கண்டனம் செய்து, பா.ச.க. துணைத் தலைவர் ஜனா. கிருஷ்ணமூர்த்தி பொரிந்து தள்ளி விட்டார் ('இந்து', 27.1.2001). ஏன்?

பார்ப்பானின் உள்நோக்கத்துக்கு ஓர் அடி விழுந்தவுடன் அடிபட்ட நாகம் போல் சீறுகிறான் பார்ப்பான். அவனே மனிதன். அப்படிச் சீறாதவன் எப்படி மனிதன்?

இந்துத்துவ வெறியர்களை இனம் காணுங்கள்!

இவர்களையும் இவர்களுக்குப் பல்லக்குத் தூக்குகிறவர்களையும் தோலுரித்துக் காட்டுங் கள். சுயமரியாதை இயக்கத்தின் பவழ விழா ஆண்டு இது!

சுயமரியாதைக் கொள்கைகள் எனத் தந்தை பெரியார் எவற்றை அறிவித்தாரோ அவற்றை அறிந்திடவும், வென்றெடுக்கவும் ஆயத்தம் ஆகுங்கள்.

தந்தை பெரியாருக்குப் பின்னர், 1978 தொடங்கிக், கடந்த 22 ஆண்டுகளாக இந்தியா முழுவதிலும் பயணம் சென்று பார்ப்பன ஆதிக்க - பார்ப்பனிய ஆதிக்கக் கொள்கை களை எதிர்த்தும், ஒடுக்கப்பட்டோருக்கு விகிதாசார இட ஒதுக்கீடு கேட்டும் பரப்புரையும் போராட்டங்களும் நடத்தியது மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி. 2001 ஆம் ஆண்டு மா. பெ. பொ. கவுக்கு வெள்ளி விழா ஆண்டு!

நம் உயிர்க் கொள்கைக்கான சுயமரியாதை இயக்கத்துக்குப் பவழ விழா எடுப்பதோடும், மா. பெ. பொ. கவுக்கு வெள்ளி விழா நடத்துவதோடும் அமைவுறாமல் நம் நேரம், பணம், சிந்தனை, உடலுழைப்பு இவற்றில் குறிப்பிட்ட அளவுப் பகுதியைக் கொள்கை வெற்றிக்கு மனமார ஈந்திட முன்வாருங்கள்!

இந்துத்துவத் திருடர்களையும், இத்திருடர் களுக்குப் பல்லக்குத் தூக்குவோரையும் புறங் காணுங்கள்!

1-2-2001 வே.ஆனைமுத்து

**தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல்**
**சுயமரியாதை மாநாடு. வாரீர் ! வாரீர் !**

படிப்பகம்

www.padippakam.com



# பெரியார் தொண்டர்கள் மறைவுச் செய்திகள்

## பெரம்பலூர் க.பாண்டியன்

பெரம்பலூர் நகர மா.பெ.பொ.க. தோழர் - பெரியார் பெருந் தொண்டர் -பாண்டியன் கலையக உரிமையாளர், தோழர் க.பாண்டியன் 5.12.2000 அன்று மாரடைப்பிற்கு ஆளாகி மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



## பூந்தோட்டம் பூ. இரா.வேணுகோபாலன்

சிதம்பரம் வட்டம் பூந்தோட்டம் பெரியார் பெருந் தொண்டரும், முன்னாள் ஊர்க் கணக்கரும், வே. ஆனை முத்துவின் நெருங்கிய நண்பருமான பூ. இரா. வேணுகோபாலன் தம் 77ஆம் அகவையில், 2.1.2001 செவ்வாய் அதிகாலை 2 மணிக்கு சிதம்பரத்தில் மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

அன்னார் உயர்நிலைப் பள்ளி மாணவப் பருவம் முதல் ஆர்வம் மிக்க சுய மரியாதைக்காரராகத் திகழ்ந்தவர். 1947 இல் அவருடைய திருமணத்திலும், 1972 ஆகஸ்டில் அவருடைய இரண்டாம் மகள் மணிமொழி - இளம் வழுதி திருமணத்திலும் வே.ஆனைமுத்து பங்கேற்றார். 18-8-2000 அன்று பூந்தோட்டத்தில் சுயமரியாதை வீரர் - முன்னாள் ஊராள்வோர் பொ.கோவிந்த சாமிக்கு நடந்த பாராட்டு விழா வேணு கோபாலன் தலைமையில் நடைபெற்றது. அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் துணைவியார், மகன்கள் கௌதமன், திருவள்ளுவன், அசோக்குமார்; மகள்கள் தேன்மொழி, மணிமொழி, பொன்மொழி, சுமதி மற்றும் உறவினர்களுக்கு மா.பெ. பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

## பேராசிரியர் சேலம் தி.வை. சொக்கப்பா

தந்தை பெரியாரின் பேரன்புக்கு உரியவரும், தலைசிறந்த வரலாற்றுப் பேரறிஞரும், சீரிய சுயமரியாதைச் செம்மலும் ஆன பேராசிரியர் சேலம் தி.வை. சொக்கப்பா அவர்கள் தம் 90ம் அகவையில் 9.1.2001 அன்று மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கிறோம். சேலத்தில் 1971 இல் தந்தை பெரியார் நடத்திய மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டிலும், மா.பெ.பொ.க. சார்பில் வல்லம் படுகையில் 1977 இல் நடைபெற்ற முதலாவது பயிற்சி வகுப்பிலும், 1979 இல் சேலத்தில் நடைபெற்ற வகுப்புரிமை மாநாட்டிலும் பங்கேற்று ஆக்கம் சேர்த்த பெருமகனார் அவர்.

## முன்னாள் மக்களவைத் துணைத் தலைவர் ஜி.இலட்சுமணன்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் களுள் ஒருவராக விளங்கியவரும், 1980 - 1984 இல் நாடாளுமன்ற மக்கள்வையின் துணைத் தலைவராக விளங்கியவரும், பின்னர் காங்கிரசில் இணைந்தவருமான ஜி. இலட்சு மணன் அவர்கள் 10.1.2001 மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னார் வே.ஆனைமுத்து, சேலம் அ.சித்தய்யன், எம்.இராஜு, ச. தமிழரசு ஆகியோர் தில்லியில் 1980 - 84 ஆண்டுகளில் இடஒதுக்கீடு தொடர்பாக ஆற்றிய பணிகளுக்குப் பெருந்துணை புரிந்த பெரியார் பேரன்பர் ஆவார்.

## மயிலாடுதுறை வழக்கறிஞர் தி.இராமதாசு

தமிழின விடுதலைக் கழக நிறுவனரும் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை இறுதி வரை உறுதியாகப் பற்றி நடந்தவரும் ஆகிய மயிலாடுதுறை வழக்கறிஞர் தி.இராமதாசு 4.12.2000 அன்று மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

## கோவை. நாகமாணிக்கம்

சிந்தனையாளன் மலர்க்குழு உறுப்பினர் கோவை நாகமாணிக்கம் 31.12.2000 அன்று மறைவுற்றார் என்கிற செய்தியை சூலூர் க.தேவராசு வழியாக அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# கி.பி. 2000

# உலகப் பெரும் பணக்காரர்கள் 52 பேர்

| நாடு | எண்ணிக்கை |
|---|---|
| அமெரிக்கா | 23 பேர் |
| செர்மனி | 3 பேர் |
| ஃபிரான்சு | 3 பேர் |
| சுவீடன் | 3 பேர் |
| சப்பான் | 3 பேர் |
| ஆங்காங் | 3 பேர் |
| சுவிட்சர்லாந்து | 2 பேர் |
| இந்தியா | 2 பேர் |
| இலத்தீன் அமெரிக்கா | 2 பேர் |
| சவுதி அரேபியா | 2 பேர் |
| துருக்கி | 1 பேர் |
| இத்தாலி | 1 பேர் |
| கனடா | 1 பேர் |
| தைவான் | 1 பேர் |
| மெக்சிகோ | 1 பேர் |
| பிரேசில் | 1 பேர் |

## பணங் குவித்தவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| பில்கேட்ஸ் | அமெரிக்கா | 6,000 கோடி டாலர் |
| லாரன்ஸ் ஜோசஃப் எல்லிசன் | அமெரிக்கா | 4,700 கோடி டாலர் |
| பால் கார்டனர் அல்லன் | அமெரிக்கா | 2,800 கோடி டாலர் |
| ரூபர்ட் முர்டோக் | அமெரிக்கா | 900.4 கோடி டாலர் |
| அசிம் பிரேம்ஜி | இந்தியா | 600.9 கோடி டாலர் |
| திருபாய் அம்பானி | இந்தியா | 600.6 கோடி டாலர் |

## இந்தியப் பணக்காரரின் வளர்ச்சி

| | | |
|---|---|---|
| திருபாய் அம்பானி | 1999 அய்விட | 450% வளர்ச்சி |
| அசிம் பிரேம்ஜி | ,, | 146% வளர்ச்சி |

(ஆதாரம்: FORBES, 'THE HINDU', 5.1.2001)

**இவ்வளவு பெரிய வளர்ச்சியும், யாருக்குச் சோறு போட? எத்தனைப் பேருக்கு வேலை தர? எங்கே அந்த வேலை?**

**தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல் சுயமரியாதை மாநாடு வாரீர் ! வாரீர் !**

www.padippakam.com



# பலித்தவரை... மேலும் சில சிந்தனைகள்

து.தில்லைவனம்

பலித்தல் என்னும் சொல் தமிழ்நாட்டில் பெருவழக்கில் உள்ளது. 'அவருடைய சொல் பலிக்கும்', 'சாபம் பலிக்கும்' போன்ற சொற்களின் பொருளை அனைவரும் புரிந்து கொள்ளுகின்றனர். உறுதியாக நிறை வேறும் நிலையை இச்சொல் இங்கு உணர்த்துகின்றது. ஆனால் பலிக்குமா என்று பார்ப்போம், பலித்தவரை நல்லது போன்ற வழக்காறுகளையும் அனைவரும் புரிந்து கொள்ளுகின்றனர்.

'பலித்தவரை' என்பதுதான் பார்ப்பனியமும் இந்து மதமுமாகும்' (எஸ்.வி. ராஜதுரை, சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர், திருவள்ளு வராண்டு 2032, பக்கம் 50.) என்னும் சொல், பார்ப்பனர்களின் குணத்தை மிகவும் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

'பேராசைக் காரனடா பார்ப்பான்' என்ற பாரதியின் பாட்டடிகளை விடத் தோழர் எஸ்.வி. ராஜதுரையின் இந்த அய்ந்து சொற்களில் பார்ப்பனர்கள் 2000 ஆண்டுகளுக்கு மேல் ஏற்றம் பெற்றே இருப்பதற்கான காரணம் நறுக்குத் தெறித்தாற் போல நவிலப்பட்டுள்ளது. அவர் எடுத்துக் காட்டியுள்ளது போல் பெரியார் சிந்தனைகளின் பிழிவாகும் இது.

பலித்தவரை போதும் என்று பார்ப்பனர்கள் மன நிறைவு எய்திவிடுவதில்லை. மேலும் மேலும் பேராசையுடன் திட்டந் தீட்டிச் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். பலித்தவரை இலாபம், பரவாயில்லை என்று எண்ணும் பார்ப்பனர்கள், பலிக்காத போது மனமுடைந்து விடுவதில்லை.

புதிய செயல் திட்டத்திற்கான வியூகத்தை அவர்கள் உடனே வகுக்கின்றனர். பலித்தவரை இலாபம் என்றால், பலிக்கா விட்டால் பரவாயில்லை, மனம் உடையத் தேவையில்லை என்ற பொருள் குறிப்பாகப் பெறப்படுகின்றது அல்லவா?

தோல்வியால் துவளாத இந்தத் தன்மை பார்ப்பன மேலாதிக்கத்திற்குத் தொடர்ந்து வழிவகுத்துக் கொண்டுள்ளது. அதுமட்டும் அன்று. மிகவும் நயவஞ்சகமான திட்டங்களைக் கூட பலித்தவரை பார்ப்போம் என்று பார்ப்பனர்கள் வெளியிட்டுக் கொண்டே உள்ளனர்.

எடுத்துக்காட்டாகப் பட்டியல் சாதியினரிலோ, பட்டியல் பழங்குடியினரிலோ, பிற்படுத்தப்பட்டோரிலோ பொருளாதார வசதியற்ற யாரும், சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிப்பதால் தங்களுக்கு வாய்ப்புகள் நழுவிப் போகின்றன என்று முறையீடு செய்யாத நிலையிலும், பார்ப்பனர்கள் பலித்தவரை பலிக்கட்டும் என்று கடந்த அம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே, மேலே கூறிய மூன்று பிரிவிலும், 'வசதி படைத்த சில குடும்பங்களே இட ஒதுக்கீட்டுச் சலுகையைப் பெற்று வருகின்றனர். மற்றவர்களுக்கு இதனால் எந்த நன்மையும் இல்லை' என்று ஒட்டாரமாகப் பேசியும், எழுதியும் வருகின்றனர். இதற்கு அவர்கள் ஒரு தடவை கூட எடுத்துக்காட்டுகள் தந்ததே இல்லை. குற்றச்சாட்டுகள் 'பொத்தாம் பொதுவில்' உள்ளவையே.

பார்ப்பனப் பத்திரிகைகள் ஆண்டுதோறும் இரண்டு மூன்று தவணைகளில் 'இந்த அரைத்த மாவையே அரைத்து' வருகின்றன.

அவர்களது உள்ளார்ந்த நோக்கம் 'சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை ஒழிப்பது தான்.'

எப்படியாவது பொருளாதார அளவு கோலைப் புகுத்தித் தாங்கள் 'ஏழைப் பிராமணர்கள்' எனச் சான்றிதழ் பெற்று அனைத்துப் பதவிகளையும் தாங்களே அபகரித்துக் கொள்ளுவதுதான் பார்ப்பனர்களின் நோக்கம்.

இதில் அவர்களுக்குக் கொஞ்சம் பலிதம் ஏற்பட்டுள்ளது. இப்போது பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டும் விதிக்கப்பட்டுள்ள 'வளர்ந்த பிரிவினருக்கான தடை - கிரீமிலேயர் - அவர்களுக்குக் கிடைத்த கொஞ்சம் பலிதம் அல்லவா?

'இசைக்கு மொழி இல்லை' என்று பார்ப்பனர்களும் அவர்களுடைய அடிவருடி களும் தொடர்ந்து கூறி வருகின்றனர். கருவிஇசைக்கு வேண்டுமானால் இது பொருந்தக் கூடும். ஆனால் வாய்பாட்டுக்கு எங்ஙனம் பொருந்தும்?

இசைக்கு மொழி கிடையாது என்று தமிழனுக்குக் காது குத்தும் பார்ப்பனர்கள் பீகாரிலோ, உத்தரப்பிரதேசத்திலோ, ஒரிசாவிலோ, மேற்கு வங்காளத்திலோ, குசராத்திலோ தியாகராசர்

படிப்பகம்

www.padippakam.com



கீர்த்தனங்களைப் பாடி அங்குள்ள மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்ட முடிகின்றதா? பலித்தவரை இலாபம் என்று தமிழன் தலையில் தானே 'மிளகாய் அரைக்கின்றனர்.'

சமயச் சடங்குகள், இலக்கியம், வாழ்க்கை நடைமுறைகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தங்களுக்குள்ள எல்லாச் செல்வாக்குகளையும் பயன்படுத்திப் பார்ப்பனர்கள் தொடர்ந்து பலித்தவரை பயனடைந்து கொண்டுதான் உள்ளனர்.

எதிர்ப்பு அதிகம் தோன்றும் போது சற்றே நெகிழ்ச்சி காட்டுவதும், எதிர்ப்புக் குறைந்ததும் மீண்டும் உச்சாணிக் கொம்பில் ஏறி உட்கார்ந்து கொள்ளுவதும் எப்போதுமே பார்ப்பனரின் நடைமுறைத் தந்திரங்களாக உள்ளன.

ஆனால் பார்ப்பனரல்லாதார் 'கிடைத்த வரை போதும்' என்றே மனநிறைவு பெற்று விடுகின்றனர்.

எனவேதான் பார்ப்பனரல்லாதார் கையிலெடுத்த எந்தவொரு பிரச்சினையிலும் முழு வெற்றி கிட்டும் முன்பே 'இடை முறிந்து' நின்று விடுகின்றனர்.

இட ஒதுக்கீடு, தமிழ்மொழி வளர்ச்சி, புரோகித மறுப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, கல்வி வளர்ச்சி, மூட நம்பிக்கை ஒழிப்பு, இந்தி எதிர்ப்பு, சமஸ்கிருத மறுப்பு என்று எத்தனைப் பிரச்சினைகளைப் பார்ப்பனரல்லாத தலைவர்கள் மேற்கொண்டனர், இன்றும் மேற்கொள்ளுகின்றனர். ஆனால் இவற்றில் எந்த ஒன்றிலும் இன்னும் முழு வெற்றி கிடைக்கவில்லை. சமுதாயத்துறையில் முழு வெற்றி பெறுவது என்பது பெரிதும் இயலாத வொன்றே. ஆயினும் அதற்கான முயற்சிகளில் தொய்வே ஏற்படக் கூடாதல்லவா?

'தமிழ் ஆட்சிமொழி' என்பதற்கான முயற்சிகளில் நாம் தொய்வின்றி, தொடர்ந்து போராடி வருகின்றோமா? அதற்கான முயற்சிகளை இடைவிடாது எடுத்துக் கொண்டுள்ளோமா? எண்ணிப் பாருங்கள்.

நில உச்ச வரம்புச் சட்டம் முழுக்க முழுக்கப் பார்ப்பனரல்லாதாருக்கு, முக்கியமாகப் பட்டியல் சாதியாருக்கும், ஓரளவு பிற்படுத்தப் பட்டோருக்கும் உதவக் கூடியது. ஆனால் இதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்தோமா? பலிக்கும்வரை தொடர்ந்து போராடினோமா? கிடைத்தவரை இலாபம் என்று வாளாயிருந்து விட்டோம்.

தமிழ்நாட்டுக்கு உயிர் நாடிப் பிரச்சினை யான காவிரிப் பிரச்சினையையே எடுத்துக் கொள்ளு வோம். தமிழ்நாட்டில் இதற்கென எத்தனைக் கட்சிகள் போராடின? எத்தனை அரசுகள் போராடின? வெற்றிக் கனி கிட்டியதா?

இதே காலத்தில் கருநாடகாவில் எத்தனை அரசுகள் அமைந்தன? ஒவ்வோர் அரசும் பேச்சு வார்த்தை என்று கூறியே தமிழ்நாட்டு அரசுகளை ஏமாற்றின; மய்ய அரசுகளை மயங்க வைத்தன.

இன்றைய நிலை என்ன? கிருட்டிணராச சாகர் அணைக்குக் கீழே உள்ள காவிரியாற்றினை காவிரியின் 'வெள்ள வடிகாலாகத் தானே' கருநாடகம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது!

மிகு மழை பெய்து வெள்ளம் வரும் காலங்களில், ஆண்டுகளில் மேட்டூர் அணை நிரம்பி வழிவதும், ஏனைய ஆண்டுகளில் தஞ்சையில் பயிரிடப்படும் பயிர்கள் நீரின்றி வாடுவதும் 'மெய்யாய், தொடர் கதையாய்' ஆகிவிட வில்லையா?

ஆனாலும் தமிழ்நாட்டில் எத்தனைத் தலைவர்கள், எத்தனை முதல்வர்கள் காவிரிப் பிரச்சினைக்காக வெற்றி விழாக் கொண்டாடி விட்டனர்; விருதுகள் பெற்று விட்டனர்! இன்னும் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திகளாகப் பதிவு செய்யாதது தான் குறை.

இவைகூட பார்ப்பனத் தன்மைக்கு மாறான, 'கிடைத்தவரை வெற்றி' என்ற பார்ப்பனரல்லாதார் மனப்பான்மையின் எதிரொலி அல்லவா?

கிடைத்த சிறு சிறு வெற்றிகளுக்கு வெற்றித் திருவிழா எடுத்துப் போராட்ட உணர்வை மழுங்கடித்து விட்டோம். கிடைத்ததே போதும் என்று போராட்ட வீரர்களைப் 'புளியேப்பம்' விடச் செய்து விட்டோம். இதற்கு மேல் எப்படிக் கிடைக்கும் என்ற உணர்வைப் பொது மக்களுக்கு ஊட்டி விட்டோம்.

பலித்தவரை பார்ப்போம் என்று பார்ப்பனர்கள் முயன்று கொண்டே உள்ளனர்.

'கிடைத்ததே போதும்' என்று பார்ப்பனரல் லாதோர் மனநிறைவு பெற்று முயற்சியைக் கைவிட்டு வாளாவிருக்கின்றனர்.

இந்த நிலையை மாற்றிட வெகு மக்கள் 'பலிக்கும் வரை' போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.

தனி மனித வாழ்க்கையில் சொந்த வாழ்க்கையில் – கிடைத்த வரை போதும் என்று மனநிறைவு கொண்டாலும்; மக்களின் பொது நன்மையில் நாட்டம் கொண்டோர் தங்களது நோக்கம் நிறைவேறும் வரை தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்க வேண்டும். வேறு வழி கிடையாது.

படிப்பகம்

www.padippakam.com



## கோவையில் தமிழ்க் குடும்பங்கள் சந்திப்பு

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த தனித்தமிழ், பெரியாரிய, மார்க்சிய ஈடுபாட்டாளர்கள் ஆண்டுதோறும் 'தமிழ்க் குடும்பங்கள் சந்திப்பு' எனும் பெயரில் குடும்பங்களோடு இருநாள் அளவளாவுவதை வழக்கமாக வைத்துள் ளனர்.

இவ்வாண்டுச் சந்திப்பு கோவையில் நிகழ்ந்தது. சூலூர் பாவேந்தர் பேரவையினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

சூலூர் ஆர்.வி.எசு.கலைக் கல்லூரி அரங்கில் 24.12.2000 காலை தந்தை பெரியார் நினைவு நாளில் - முதல் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின.

பங்கேற்ற அனைவரும் தத்தம் குடும்ப உறுப்பினருடன் அவை முன் தோன்றி அறிமுகவுரை வழங்கினர்.

பேராசிரியர் இரா. இளவரசு - பேரா. இரா. வேலம்மாள் இணையரும், பேராசிரியர் கு. திருமாறன் - பங்கயம் இணையரும் அனைவர்க்கும் நினைவுப் பொருள் வழங்கிச் சிறப்பித்தனர்.

நினைவு போற்றல், ஓவியப் போட்டி, இசையரங்கம், கலை நிகழ்ச்சி - இவற்றை அடுத்து சூலூர்குளத்திற்குச் சென்று படகுப் பயணம் செய்து குடும்பத்தினர் மகிழ்ந்தனர். மாலை சிந்தனை அரங்கில் கோவை ஞானி, அரணமுறுவல் பங்கேற்றனர்.

மறுநாள் 25.12.2000 காலை தனிப் பேருந்தில்அனைவரும் சுற்றுலா புறப் பட்டனர். சூலூரிலிருந்து உடுமலை, அமராவதி அணை, பொள்ளாச்சி, ஆழியாறு அணை சென்றனர். மதியவுணவும் கலை நிகழ்ச்சிகளும் ஆழியாறு அணையில் நடந்த பின், கேரள மாநிலம் பாலக்காடு, மழம்புழா அணை கண்டு இரவு கோவை மீண்டனர்.

பேராசிரியர் மு.இளமுருகன் வரவேற்புரையுடன் தொடங்கிய இருநாள் நிகழ்ச்சிகள், புலவர் செந்தலை ந.கவுதமன் நன்றியுரையுடன் நிறைவுற்றன.

செய்தி: சூ.நா. வரதராசு, சூ.ச. அங்கமுத்து
(சூலூர் பாவேந்தர் பேரவை)

## வாழப்பாடி இராம கர்ணன் - ப.இலலிதா வாழ்க்கை ஒப்பந்த விழா

இந்திய அரசு முன்னாள் அமைச்சரும், தமிழக இராசீவ் காங்கிரசின் நிறுவனர் தலைவரும், மா.பெ.பொ.க.வின் இடஒதுக் கீட்டுப் பணிகளில் 22 ஆண்டுகளாகத் தோன்றாத் துணையாக விளங்குபவருமான வாழப்பாடி கூ.இராமமூர்த்தி - கலைமணி ஆகியோரின் இளைய மகன் கர்ணன் - காஞ்சி மாவட்டம் மௌலிவாக்கம் பி.எஸ். பழநி - இராணி ஆகியோரின் மகள் இலலிதா ஆகியோரின் மன்றல் விழா, சேலத்தில், இரத்தினவேல் கவுண்டர் திருமண மண்டபத்தில் 21.1.2001 ஞாயிறு காலை 10.15 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது. உறவினர்களும், நண்பர்களும் பல்வேறு கட்சியினருமாக 5000 பேருக்கு மேல் இவ்விழாவில்பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இவ்விழாவுக்கு எம்.பி.சுப்பிரமணியம் தலைமை ஏற்றார். வாழப்பாடி கூ.இராம மூர்த்தி வரவேற்புரையாற்றினார். தமிழக வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், மக்களவைத் துணைத் தலைவர் பி.எம்.சயீத் இருவரும் முன்னிலை ஏற்றனர்.

இந்தியக் குடி அரசின் முன்னாள் தலைவர் ஆர்.வெங்கட்டராமன் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சியை நடத்தி வைத்தார்.

தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், புதுவையைச் சார்ந்த பல தலைவர்களும் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

பகல் 11.30 மணி முதல் நாட்டுப்புற இன்னிசை விருந்து நடைபெற்றது.

### மணமக்களுக்கு வரவேற்பு விழா

24.1.2001 புதன் மாலை 6 மணிக்குச் சென்னையில், எழும்பூர் இராணி மெய்யம்மை மாளிகையில், மணமக்கள் இராம - கர்ணன் - ப.இல்லிதா ஆகியோருக்கு மிகச் சிறப்பான முறையில் வரவேற்பு விழா நடைபெற்றது.

த.மா.க. தலைவர் மூப்பனார், தமிழக முதல்வரின் சார்பில் அவர் துணைவியார் தயாளு அம்மாள், மு.க. ஸ்டாலின் முதலியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். ★

தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல்

படிப்பகம்

www.padippakam.com



# தாம்பரத்தில் எழுச்சியுடன் நடந்த

## சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் வெளியீட்டு விழா

மற்றும்

# தமிழ்வழிக் கல்வி மாநாடு

**உயர்கல்வி, தொழிற்கல்வியைத் தமிழ் வழியில் கற்பிக்க வேண்டும்**

**தமிழ் ஆட்சி மொழிச் செயல்பாட்டை அரசு விரைவுபடுத்த வேண்டும்**

**தமிழ்வழிக் கல்வி மாநாட்டின் தீர்மானங்கள்**

'சிந்தனையாளன்' மாத ஏட்டின் பொங்கல் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும், மா.பெ.பொ.க. சார்பில் தமிழ் வழிக்கல்வி மாநாடும் சென்னை தாம்பரம் கடப்பேரியில், மங்கள மகால் திருமண மண்டபத்தில், 6-1-2001 சனி அன்று சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்ச்சி களை மார்க்சிய பெரியாரியப் பொதுவு டைமைக் கட்சியின் தாம்பரம் கிளை நடத்தியது.

காலை 10 மணிக்கு தி.ர. விசயன் மற்றும் காஞ்சி கலைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

காலை 11 மணிக்குச் 'சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் வெளியீட்டு விழா' நடைபெற்றது.

காஞ்சி சி.நடராசன் வரவேற்புரை யாற்றினார். 'சிந்தனையாளன்' ஆசிரியர் வே. ஆனைமுத்து தலைமையில், ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் மு.க. சுப்பிரமணியன் பொங்கல் மலரை வெளியிட்டார். தமிழகச் சட்டப் பேரவையின் முன்னாள் தலைவரும், எம்.ஜி.ஆர் அ.தி.மு.க. தலைவருமான தாம்பரம் முனு ஆதி மலரின் முதல் படியைப் பெற்றுக் கொண்டார்.

சிந்தனையாளன் ஏட்டின் தொண்டினைப் பாராட்டியும், பொங்கல் மலரின் சிறப்பைக் குறித்தும் சீர்காழி மா. முத்துச்சாமி, சங்கமித்ரா, க. முகிலன், பேராசிரியர் கு. அரசேந்திரன், வழக்குரைஞர் கோவி ராமலிங்கம், கு.ம. பாலகிருஷ்ணன், நா. தட்சணாமூர்த்தி, திருச்சி ந. கருணாகரன், புதுவை ச. நடராசன், வடக்கு மாங்குடி பா.மோகன், மலர்மணி ஆகியோர் உரையாற்றினர்.

முற்பகல் நிகழ்ச்சி, கி. மாஜினி நன்றி கூறலுடன், 2.30 மணிக்கு முடிவுற்றது.

தமிழ் வழிக்கல்வி மாநாடு பிற்பகல் 4 மணிக்கு, கவிஞர் தமிழேந்தி தலைமையில் நடைபெற்றது. வாலாசா வல்லவன் வரவேற்புரையாற்றினார்.

தமிழ் உரிமைக் கூட்டமைப்பு ஒருங் கிணைப்பாளர் புலவர் கி.த. பச்சையப்பன், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ. மணியரசன், தமிழ் - தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, தமிழ்நாடு அரசுக் கல்லூரிப் பேரவைத் தலைவர் முனைவர் ப. சிவகுமார், பட்டதாரி - முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத் தலைவர் த. சுப்பிரமணியம், தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணிச் செயலாளர் செ.நடேசன், மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்புச் செயலாளர் வே.ஆனைமுத்து ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

கவிஞர் தமிழேந்தி முன்மொழிய, பின்கண்ட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ப. வடிவேலு நன்றி கூறலுடன், இரவு 8.45 மணிக்கு நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

**தமிழ்வழிக் கல்வி மாநாட்டில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்**

1. மய்ய அரசு பிற்போக்குத்தனமானதும், வெகு மக்களுக்கு எதிரானதுமான கல்விக் கொள்கையை விரைந்து நடைமுறைப் படுத்தத் துடிக்கின்றது. ஆனாலும் தேசிய சனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள அரசியல் கட்சிகளோ, எதிர்க்கட்சிகளோ இவற்றை வலிவாக எதிர்க்கவில்லை என்பது

படிப்பகம்

www.padippakam.com



மிகுந்த கவலைக்குரியதாகும். மய்ய அரசு 1977 இல் கல்வியைப் பொது அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டு சென்றபோது மாநில அரசுகள் உறங்கிக் கிடந்ததால் ஏற்பட்ட தீய விளைவாகும் இது. எனவே, பொதுத்தேர்தலில் ஈடுபடும் எல்லா அரசியல் கட்சிகளும் - கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் சேர்க்கப் போராட வேண்டும் எனத் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் தமிழ்உரிமை அமைப்புகளும் பொதுமக் களும் வற்புறுத்த வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. தமிழ்வழிக் கல்விக்கும், தாய்மொழிக் கல்விக்கும், 'அனைத்து மக்களுக்கும் கல்வி' என்னும் கொள்கைக்கும் எதிராக, கல்வியைத் தனியார் மயமாக்குதல் எனும் போக்கினை மத்திய அரசு - மாநில அரசுகள் உடனடியாகக் கைவிட வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்துகிறது. தாய்மொழி வழிக் கல்வியில் அக்கறையுள்ள அனைவரும் இதனை உணர வேண்டும் என இம்மாநாடு கோருகிறது.

3. உயர்கல்வி - தொழிற்கல்வி அனைத்தும் தமிழ்வழியில் நடத்தப்பட வேண்டும். இதற்கு ஏதுவாகத் தமிழில் அறிவியல் மற்றும் தொழிற் கல்விக்கான பாடநூல்கள் வெளிவரத் தமிழக அரசு உடனே ஆவன செய்ய வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

4. கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை 6 விழுக்காடாக உயர்த்த வேண்டுமென மத்திய அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

5. எல்லா நிலை மேற்படிப்புகளிலும் தமிழ்வழியில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு உரிய இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.

6. தமிழ்வழியில் படிக்கும் மாணவர் களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.

7. தமிழ்வழியில் பயிலும் இளநிலை, கலை மற்றும் அறிவியல் பட்ட வகுப்பு மாணவர்களுக்கான ஊக்கத் தொகை ஆண்டுக்கு ரூ.1000/- ஆக உயர்த்தப்பட வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.

8. தமிழ்நாட்டில் பன்னிரெண்டாம் வகுப்பில் தமிழ்வழியில் படிப்பவர்கள்தாம் அதிகம். ஆனால் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் போன்ற தொழிற் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் போது ஆங்கில வழியில் படித்தவர்களுக்கு மிகுதியான விகிதத்தில் இடம் அளிக்கப் படுகிறது.

1996 ஆம் ஆண்டு எடுத்த கணக்கெடுப் பின்படி தமிழ் வழியில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேறியவர்கள் 80 விழுக்காட்டினர். ஆங்கில வழியில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேறியவர்கள் 20 விழுக்காட்டினர். எனவே, இனி, மேற்கண்ட மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு அந்தந்த ஆண்டும் தமிழ் வழியில் படித்தோர் எத்தனை விழுக்காடோ அத்தனை விழுக்காடும், ஆங்கில வழியில் படித்தோர் எத்தனை விழுக்காடோ அத்தனை விழுக்காடும் இட ஒதுக்கீடு செய்து வழங்கும் படி தமிழக அரசு ஆணையிட வேண்டும். எனவே தமிழ் ஆங்கில வழிகளில் படித்தோர்க்கு அவரவர் தேர்ச்சி பெற்ற விழுக்காட்டு விகிதத்தில் தொழிற் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்க உடனடி யாக ஆணையிட வேண்டும் என்று தமிழக அரசை இம்மாநாடு கோருகிறது.

9. கடந்த இருபது ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் 12 ஆம் வகுப்புக்குத் தேர்ச்சிக்குரிய மதிப்பெண் களாக செய்முறைத் தேர்வும் + எழுத்துத் தேர்வும் சேர்த்து இருநூற்றுக்கு எழுபது என்று உள்ளதை மாற்றி, 24.01.2000 நாளிட்ட அரசாணையானது செய்ம்முறைத் தேர்வுக்கு 50 மதிப்பெண்ணுக்கு முப்பது மதிப்பெண்கள் என்றும், எழுத்துத் தேர்வுக்கு 150க்கு 40 மதிப்பெண்கள் என்றும் கட்டாயமாக்கித் தேர்ச்சிக்குரிய மதிப்பெண்களாக அறிவித் திருப்பது வேதனைக்குரியது. இந்த அரசாணை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் படித்து முன்னேறுவதை மிகக் கவனமாகத் தடுத்துள்ளது என்பதால் இந்த அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் எனத் தமிழ்நாட்டு அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

– மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

படிப்பகம்

www.padippakam.com



மடல்கள்

# பக்த கே(ா)டிகளின் காட்டுமிராண்டித்தனம் தமிழக முதல்வரின் தனிக் கவனத்திற்கு!

பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய அய்யா அவர்களுக்கு,

வணக்கம். நலம். விரும்புவதும் அதுவே.

'சிந்தனையாளன்' பொங்கல் மலரில் என்னுடைய கட்டுரையை இடம் பெறச் செய்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முக்கியமான செய்தி ஒன்றைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவே இதை எழுதுகின்றேன்.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏறத்தாழ ரூ.200 கோடி செலவில் 150 சமத்துவ புரங்களைக் கட்டுவதற்காக உருவாக்கிய திட்டத்தில், கட்டி முடித்து திறக்கப்பட்டுள்ள சமத்துவபுரங்களில்- சமத்துவபுர சட்ட திட்டங் களுக்குப் புறம்பாகக் கோயில்கள் உருவாகி வருவதையும், இதற்கு அதிகாரிகளே உடந்தையாக இருப்பதையும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் இதன் விளைவாக எழுந்துள்ள பிரச்சினைகளையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

காஞ்சிபுரம் ஏனாத்தூர் பெரியார் நினைவு சமத்துவபுர வளாகத்தில், இந்துக்கள் கடவுள் எனப்படும் மூன்று சிலைகளை வைத்து வழிபட்டு வருகின்றனர்.

வேலூரிலிருந்து ஆம்பூர் செல்லும் வழியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் இந்து - கிறித்தவ - இஸ்லாம் மதக் கோயில் கள் கட்டப்பட்டிருப்பதாக உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் சொன்னார். இதை நேரில் நான் பார்க்கவில்லை.

இவற்றைப் பார்க்கும் பொழுது தமிழ் நாட்டிலுள்ள அனைத்துச் சமத்துவ புரங் களிலும் எதிர்காலத்தில் கோயில்கள் உருவாகி- மதக் கலவரங்கள் மூளும் அபாயம் நிகழக் காலம் கனிந்து வருவதாகவே தோன்றுகின்றது.

இந்தப் பிரச்சினையில்சிகரமாகத் திகழ்வது காஞ்சிபுரம் மாவட்டம் படப்பைக்கருகில் கரசங்கால் ஊராட்சி துண்டல் கழனியில் அமைந்துள்ள பெரியார் நினைவு சமத்துவபுரம்தான். இங்கே சமத்துவபுரம் உருவாவதற்கு முன்பே 'முனீஸ்வரன்' என்று மக்கள் அழைக்கின்ற சிலை ஒன்று ஆலமரத்தடியில் இருந்திருக்கின்றது. சமத்துவபுர வேலைகள் அனைத்தும் முடிந்த பிறகுதான் இந்தச் சிலை இருப்பதை நான் கவனித்தேன். உடனே மாவட்டக் கூடுதல் ஆட்சியரைச் சந்தித்து அந்தச் சிலையை அகற்றும்படிச் சொன்னேன். அவரும் அகற்ற உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார். ஒருமாதம் கடந்தும் கூட சிலை அகற்றப்படாததால் 26.12.2000 அன்று 30.12.2000க்குள் அதை அகற்ற வேண்டும் என்றும், இல்லாவிட்டால் சிலையை 31 ஆம் தேதி நானே அகற்றுவேன் என்றும் எழுதி மாவட்ட ஆட்சியரிடம் நேரில் மனு அளித்தேன். பிறகும் சிலை அகற்றப்படாததால் நானே சிலையை அகற்றினேன். (நான் சிலையை அகற்றியது சட்ட மீறல் என்றாலும் கூட சமத்துவபுரங்களில் கடவுள் எனப்படும் சிலைகள் இருக்கக் கூடாது என்பதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகவே இதைச் செய்தேன்)

31 ஆம் தேதி இரவு மூன்று பேர் எங்கள் வீட்டிற்குவந்து சிலை எடுத்தது சம்பந்தமாக என்னை மிரட்டினார்கள். நான், காவல் நிலையத்தில் புகார் செய்யுங்கள் என்று சொல்லி அனுப்பினேன். 2.1.2001 அன்று சிலை என்னிடம் இருப்பதைக் கூடுதல் ஆட்சியரிடம் தெரிவித்தேன். அவர் அதை திருப்பெரும்புதூர் வட்டாட்சியரிடம் ஒப்படைத்து விடும்படிச் சொன்னார். நான் வட்டாட்சியரிடம் சென்று 'சிலையைப் பெற்றுக் கொள்ளுங் கள்' என்றேன். அவரோ, 'சமத்துவபுரத்தில் சிலை இருப்பதில் என்ன தவறு?' என்று வினவி, சிலையைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். ஆகவே, திருப்பெரும் புதூரிலிருந்து தொலைபேசி மூலம் மணிமங்கலம் காவல் வட்ட ஆய்வாளருடன் தொடர்பு கொண்டு சிலை என்னிடம் இருக்கும் விவரத்தைச் சொன்னேன். அன்று இரவு அவர் எங்கள் வீட்டுக்கு வந்து சிலையைப் பெற்றுக் கொண்டார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தவர்களிடம் மறுநாள் சிலையை அவர் ஒப்படைத்து விட்டார்.

இதற்குப் பிறகு மீண்டும் அந்தச் சிலையை அதே சமத்துவபுரத்தில் ஆலமரத்தடியிலேயே புதிய பீடம் அமைத்து வைத்திருக்கின்றார்கள். இதுவரை அதிகமாக மக்களின் கவனத்தைக் கவராமல் இருந்த அந்தச் சிலை, சமத்துவபுரம் கட்டப்பட்ட பின் புதிய மரியாதையைப் பெற்றிருக்கின்றது.

இந்த விவரங்களையெல்லாம் மனுவாக எழுதி 8.1.2001 அன்று முதலமைச்சரின் நேர்முக உதவியாளர் திரு. தமிழரசன் அவர்களிடம் கொடுத்து, முதலமைச்சருடைய கவனத்துக்குக் கொண்டு வரும்படிக் கூறினேன். அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால், அவர் என்னிடத்தில் சொன்னது என்னவென்றால், 'சமத்துவபுரத்தில் கோயில் கட்டுவது தவறில்லையே' என்பதுதான். அவருடைய நெற்றியில் சந்தனம், குங்குமம், சாம்பல் என்று மூன்று குறிகளும் காணப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இருவரும், நான் சமத்துவ புரத்தில் இனிமேல் நுழைந்தால் என்னை உதைத்து அனுப்பும்படிக் கூறியிருக்கின்றார்கள் - சமத்துவபுரம் வாழ் மக்களிடம்.

இந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இருவரும் என்னிடம் கோபம் கொள்வதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இவர்கள் சமத்துவபுரம் பயனாளிகளாக ஆகத் தகுதி வாய்ந்தவர்கள் என்று தேர்ந்தெடுத்தவர்களில் பலர் பணக்காரர்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்ததால் அந்த மனிதர்களுக்கு அளிக்கப்பட்ட வீடுகளை மாவட்ட ஆட்சியர் இரத்தாக்கி விட்டார். அதிலிருந்தே கடந்த ஒருமாதமாக பலரை எங்கள் வீட்டுக்கு அனுப்பி என்னை மிரட்டிக் கொண்டு இருந்தார்கள்.

மேலும், 13.1.2001 அன்று அதிகாலை 1 மணி அளவில் இருவர் முகத்தைக் கறுப்புத் துணியால் மூடியபடி கையில் அரிவாளுடன் வந்து எங்கள் வீட்டுக்கதவைத் தட்டினார்கள். பக்கவாட்டிலுள்ள கதவை நான் திறந்து பார்த்து விட்டு, யார் என்று வினவினேன். 'பி.டி.ஓ.அனுப்பினார்; உன்னைத் தீர்த்துக் கட்டி விட்டுத்தான் அடுத்த வேலை' என்று சொன்னார்கள் அந்த மனிதர்கள். நான், 'என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வருகின்றேன்; அதுவரை காத்திருங்கள்' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே வந்துவிட்டு, பிறகு கதவைத் திறந்து வெளியே பார்த்தால் எவரையும் காணவில்லை.

சமத்துவபுரத்தில் இன்னும் சில பணக்காரர்கள் இருக்கின்றார்கள் என்ற தகவல் எனக்கு வந்ததால், அவர்கள் யார் என்று அறிய முடியுமா என்று முயல்வதற்காகவும், வீட்டுக்கு வந்து மிரட்டியவர் களைப் போன்ற உடல் கட்டுடையவர்கள் யாரேனும் அங்கே இருக்கின்றார்களா என்பதை அறிவதற் காகவும், அன்றைய தினம் பகல் 12.30 மணிக்கு என் அம்மாவுடன் துண்டல் கழனி சமத்துவபுரத்துக்குள் சென்றேன். பி.டி.ஓ. சொன்னார் என்றுசொல்லியே அங்கேயுள்ள ஆண்களும் பெண்களும் எங்களைத் தாக்கினார்கள். அந்த நேரம் கரசங்கால் ஊராட்சி மன்றத் தலைவரின் (தி.மு.க.) மகன் அங்கே வந்து, 'இந்தத் தாலியறுத்தான் கட்சிக்காரர்களை உயிரோடு எரித்துக் கொல்ல வேண்டும்' என்று சொல்லவே தாக்குதல் இன்னும் கடுமையானது. இறுதிவரை நான் எந்த வலியையும் வெளிப்படுத்தாமல் சிரித்துக் கொண்டே அமைதியாகப் பதில் சொன்னது அவர்களுடைய கோபத்தை அதிகமாகத் தூண்டி விட்டது. நீ எங்களிடம் அழுது கெஞ்சி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார்கள் அவர்கள்.

ஒரு மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு என் அம்மாவை அழைத்துக் கொண்டு 1/4 கி.மீ. தொலைவிலுள்ள பேருந்து நிறுத்தம் சென்று ஒருமணி நேரம் ஓய்வெடுத்த பின். வீடு வந்தோம். பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக் கின்றேன்.

குழந்தைப் பருவத்திலிருந்தே என் தந்தையுடன் பொதுவாழ்வில் ஈடுபட்டவள் நான். ஆனால், பொதுவாழ்வில் முதன்முதலாக அடி வாங்கியது இப்பொழுதுதான். சில வன்முறைக் கும்பல்களில் புகுந்து கூடப் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றியிருக்கின்றேன். அப்பொழுது கூட வன்முறையாளர்கள் என்னைக்கண்டு அஞ்சுவார்கள். இந்தப் பகுதி மக்களும் அஞ்சத்தான் செய்வார்கள். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தூண்டியதால்தான் அந்த மக்கள் துணிந்து என்னைத் தாக்கினார்கள்.

ஒருசமத்துவபுரத்திலுள்ள கடவுள் எனப்படும் சிலையை அகற்றக் கடமைப்பட்ட அதிகாரிகளே அதைச் செய்யாமல், மத வெறிக்கு என்னைப் பலியிடத் தூண்டியதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகவே இந்தச் சம்பவங்களை எழுதினேன்.

சமத்துவபுரங்களில் கோயில்கள் இருக்கக் கூடாது என்பது அரசின் சட்டம். அது மீறப்படுகின்ற நிலையில், அதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருவது நல்லது என்பதற்காகவும், பெரியார் நினைவு சமத்துவபுரங்களிலுள்ள கடவுள் எனப்படும் சிலைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கத் தாங்கள் அரசைத் தூண்டுவீர்கள் என்பதற்காகவும்தான் இந்தக் கடிதத்தை அனுப்புகின்றேன்.

இதே விவரங்களைத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கும் கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்றேன்.

நன்றி. நலம் நாடும் **த.அமலா**

மேல்படப்பை

அன்பிற்குரிய அய்யா, வணக்கம். வட மாநிலங்களிலெல்லாம் பயணித்து, சிந்தனை விதையை ஊன்றி வந்த தங்களுக்கு என் பணிவான வணக்கங்கள். சட்ட நுணுக்கத்தை, தெளிவான சிந்தனையை, துணிவான அணுகு முறையை, கனிவோடு, எளிமைத் தோற்றத்துடன் உள்ளடக்கி, வெளிப்படுத்துகிற தங்களின் ஆற்றல் உயரியது. வரலாற்றுப் பார்வையோடு ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிற, உயரிய தன்மையை கோவையில் சந்தித்த பொழுதே என்னால் உணர முடிந்தது. வரலாற்றை வடிவு அமைத்த மண் மீட்புப் போராளி திலீபன் அவர்களின் திழற்படத்தை அட்டையில் வெளியிட்டது மகிழ்வூட்டுகிறது. பொழுது போக்குகள் நிறைந்த் இந்த உலகுக்கு - வரலாறும், நுட்பமும் காட்டும் தங்களின் இதழும், தாங்களும் மறக்க முடியாதவர்களே.

அன்புடன்,

7.12.2000 **பொள்ளாச்சி நசன்**

தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல்
சுயமரியாதை மாநாடு. வாரீர் ! வாரீர் !

www.padippakam.com



# உழைப்புத் திருநாள்

முனைவர் மு. வளர்மதி

'உழவே தலை' என்றுணர்ந்தவர்கள் தமிழர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று அய்ந்து வகை நிலவியல் கூறுகளுக்கு ஏற்பத் தங்கள் வாழ்வியலை அமைத்துக் கொண்டவர்கள் பண்டைத் தமிழர்கள்.

பயிர்த் தொழில், நெசவுத் தொழில், தச்சுத் தொழில், மட்கலத் தொழில், கொல்லுத் தொழில், உலோகத் தொழில், அணிகலத் தொழில், தோல்தொழில் என்ற கைத் தொழில்களும், கால்நடை வளர்ப்பு, வேட்டையாடுதல், மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்துக் குளித்தல் என்ற நிலஞ்சார்ந்த தொழில்களும், ஓலைத் தொழில், பொம்மை செய்தல், சாயப்பாக்கு, சுண்ணம் தயாரித்தல், கயிறு திரித்தல், நூல் தொழில் ஆகிய கைவினைத் தொழில்களும்; கள்அடுதல், சலவைத் தொழில், கட்டடத் தொழில், விறகு வெட்டுதல், யானைப் பாகன், தேர் ஓட்டுபவன், துடியன் எனும் பிற தொழிலாளர் தொழில்களும் அரசர், அமைச்சர், ஒற்றர், தூதுவர், காவலர், அறங் கூறவையகத்தர், அறிவர், ஆசிரியர், ஆவண மாக்கள், கணியன், நாழிகைக் கணக்கர், புலவர், மருத்துவர் ஆகிய அறிவுசார் தொழில்களும் பண்டை நாளில் நடைபெற்று வந்தன என்பதைச் சங்க இலக்கிய ஆய்வுகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

இப்படிப் பல தொழில்கள் இருந்து வந்த போதிலும் சமுதாயம் முழுமைக்கும் பயன் தரும் வகையில் மக்களின் பசியைப் போக்கும் உற்பத்தியாளனாக உழவன் இருந்ததனால் 'உழவே தலை' என்றும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்' என்றும் போற்றப்பட்டது; சிறப்பிக்கப் பட்டது.

*'வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது*

*இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி'*

எனத் தொல்காப்பியரும் சுட்டிக்காட்டியுள்ளார். பெரும்பாணாற்றுப்படையில் உருத்திரங் கண்ணனார் 'குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்' என்று சிறப்பித்துக் கூறுகிறார். இப்படி இலக்கியங்கள் உழவர்களைத் தலை மேல் வைத்துக் கொண்டாடுகின்றன. ஆனால் இலக்கியங்கள் இப்படியெல்லாம் நம்மைச் சிறப்பித்துக் கூறுகின்றன என்று உழவர் சமுதாயம் பூரித்துப் புளகாங்கிதம் அடையும் நிலையைக் காண முடிவதில்லை.

கழனியில் இரவும் பகலும் பாடுபட்டு உழைத்துச் சேர்த்த நாள் ஒன்றுதான் உழவர்களுக்கு மகிழ்ச்சியான நாளானது. புதுநெல்லரிசி, புதுப்பானை, புதிய கரும்பு, புதிய பூசனைக்காய், புதிய இஞ்சி, புதிய மஞ்சள் கொத்து வைத்து, புத்தாடை உடுத்திக் கதிரவனை வணங்குவதும், தம்மோடு உழைப்பில் பங்கெடுத்துக் கொண்ட மாடுகளை அலங்கரித்துப் பொங்கல் சோறு ஊட்டி மகிழ்வதும் ஒரு வழி வழிமரபாகத் தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கிறது.

இந்த அறுவடைத் திருநாளை உழவர்களின் விழாவாக, பொங்கல் விழாவாகக் கொண்டாடி வந்த இந்தப் பின்னணியில், காலப்போக்கில் 'மகரசங்கிராந்தி' என்று சொல்லப்படும் இந்திரன் கதையும் இதில் புகுந்து கொண்டது. 'தைத் திங்கள் முதல் நாளன்று ஞாயிறு மகர ராசியில் வந்து உத்தராயணம் தொடங்குவதால் வைதிக முறையில் இதனை மகர சங்கிராந்திப் பண்டிகை யென்பர். இதனால், உழவர்களே யன்றி எல்லோரும் இந்நாளைக் கொண்டாடுவர்... திருமால் கண்ணனாக அவதரித்த போது, ஆயர்கள் இந்திரனை வழிபடுவதைக் கண்டு அவ்வழிபாட்டை நிறுத்தினார். இந்திரன் சினந்து, பெருமழை பெய்வித்து

படிப்பகம்

www.padippakam.com



ஆநிரைகளுக்குத் துன்பமுண்டாக்கினான். கண்ணன் கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்து, ஆயர் களையும் ஆநிரைகளையும் காத்தான். தன் ஆற்றல் செல்லாததால் இந்திரன் கண்ணனை வணங்கித் தன்னையும் ஆயர்கள் வழிபடும் படி அருள் செய்ய வேண்டிக் கொண்டான். அவ்வாறே போகியன்று இந்திரனையும், பொங்கலன்று கண்ணனையும், மாட்டுப் பொங்கலன்று மாடுகளையும் கன்றுப் பொங்கலன்று கன்றுகளையும் மக்கள் வழிபட்டனர்' என்று நூல்கள் கூறும் (கலைக் களஞ்சியம், தொகுதி ஏழு, ப.645). ஆரியத்தின் சூழ்ச்சி பொங்கலையும் விட்டு வைக்கவில்லை. இதற்கும் ஒரு கதை கூறித் தங்களுக் குரியதாக்கி வைத்திருக்கிறது.

'உழவு' என்பது 'உழத்தல்', 'உழைப்பு' என்பதையும் குறிக்கும் ஒரு சொல்லாகும். உழைப்புடன் தொடர்புடையதாகத் தங்களுடைய விழாவை அமைத்துக் கொண்டவர்கள் தமிழர்கள். பின்னாளில் ஆரியத்தின் கலப்பில்லாத சூழ்ச்சி மேற்கூறிய கதைப்படி இந்த விழாவிலும் புகுந்து கொண்டது.

இன்றளவில் தைப் பூசம், தை அமாவாசை, தை கிருத்திகை, மாசி மகம், மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம், சித்திரா பௌர்ணமி, ஆடிக் கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆயுதபூசை, சரஸ்வதி பூசை, விஜயதசமி, விநாயக சதுர்த்தி, தீபாவளி, கந்தசஷ்டி, ரம்ஜான், பக்ரீத், முகரம், கிருஸ்மஸ் என்ற பண்டிகைகளோடு இன்னும் பல்வேறு கோவில் கும்பாபிஷேகங்கள், பருவ கால வழிபாடாக அய்யப்பன் வழிபாடு ... இப்படி இன்னும் எத்தனையோ விழாக்களையும் பண்டிகைகளையும் தமிழ் நிலத்தில் வாழும் தமிழர்கள் பெரும் பணமும் நேரமும் செலவிட்டுக் கொண்டாட்டம் என்ற பெயரில் நடத்தி வருகிறார்கள். இது அறிவுக்கும் அறிவியலுக்கும் புறம்பானது என்று இப்போதைய தமிழர்களுக்கு நினைக்க நேரமில்லை. போதாக் குறைக்கு மார்வாடிகளின் 'ஹோலி' பண்டிகையும் இப்போது தமிழர்களின் முகங்களில் சாயம் பூசியிருக்கிறது. கொண்டாட்டம், களியாட்டம் என்ற பெயரில் இளைஞர் களிடையே இழிவான செயல் பாடுகள் வளர்ந்து வருகின்றன.

இத்துணைப் பார்ப்பனப் பண்டிகைகளை - திருவிழாக்களைக் கொண்டாடிவரும் தமிழர்களிடையே பொங்கல் விழாவிற்கு உரிய தனித்தன்மையும், தனிச்சிறப்பும் மங்கி வருகிறது என்றே கூறலாம். ஏனெனில் இன்று உலகம் தகவல் தொழில் நுட்ப அறிவியல் வளர்ச்சியில் 'ஒரு கிராமம் போல்' சுருங்கி வருகிறது. நிலங்களை உழுதுண்டு வாழும் நினைப்பு சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. நீர்வளம், நிலவளம் குறைந்து வருவதும் ஒரு காரணமாகும். அந்நிய ஏகாதிபத்திய நாடுகளின் ஒப்பந்தங்களும், தொழில் ரீதியான ஊடுருவல்களும் தமிழர்களின் வாழ்வை உலுக்கிப் பார்க்கிறது. கல்வி முறை ஏழைகளை மிரள வைத்திருக் கிறது; வேலைவாய்ப்புத் தேடி தமிழர்களை அந்நிய நாடுகளுக்குத் துரத்துகிறது. பாட்டாளிகளை, கூலி உழைப்பாளர்களை நகரை நோக்கி ஓட வைக்கிறது.

இளைஞர்களையும், இளைய தலைமுறை களையும் விரைவில் பணக்காரர்களாகி, வாழ்வில் சுகபோகிகளாக வாழ்வதெப்படி என்பதை நோக்கித் திசை திருப்புகிறது. அரசியல் கட்சிகள் சாதிச் சங்கங்களாகச் சுருங்கிப் பேயாட்டம் ஆடுகின்றன. மதவாதம், இன வாதம் என்ற பிடிவாதங்கள் மனிதநேயத்தின் வேர்களை வெட்டி வீழ்த்துகின்றன. பெண் இனத்தின் பிறப்புரிமையே தடுக்கப்படுகிறது. இந்தச் சூழலில் உழவனை உழவனே நினைத்துப் பார்க்கவும் மற்றவர்கள் அவன் நிலையை எண்ணிப் பார்க்கவும் ஒரிரு நாட்கள் என ஒதுக்கப்படுகின்றன.

'பொங்கல்' என்ற சொல் உயர்ச்சி, கிளர்தல், சமைத்தல், பொலிதல், மிகுதி, கள் என்ற பல பொருளைக் குறிப்பதாகும். (பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து (சிலப். 5.69); பொங்கல் வெண்காழ் (அகம் 129.9) பொங்கல் வெண்மழை (நெடு. 19; அகம்

படிப்பகம்

www.padippakam.com



219.). பொங்கலைத் தமிழர்களின் விழாவாக, உழவர்களுக்குரிய திருநாளாகக் கருதி அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதை ஓர் இயக்கமாக நடத்திக் காட்டியவர் நல்லாசிரியர் கா. நமச்சிவாயர் அவர்கள். உழவர்களின் விழாவை உழவர்கள் மட்டுமல்ல மற்றவர்களும் கொண்டாட வேண்டும் என்ற உணர்வு முதன்முதலில் வளர்க்கப்பட்டது, இப்பேராசிரியர் பெருமகனாரால் தான். தொடர்ந்து திராவிட இயக்கச் சிந்தனை யாளர்கள் இவ்விழாவின் உண்மை நோக்கத்தை விளக்கி இந்து மதப் பண்டிகைகளைக் கண்டித்துப் பேசினர்; எழுதினர். பாவேந்தர் பாரதிதாசனும் இதனை அறிவியற்பாங்கான விழா என்று போற்றினார். தான் நடத்தி வந்த 'குயில்' ஏட்டின் சார்பில் ஒவ்வோராண்டும் சிறப்பு மலர் வெளியிட்டார். 'பொங்கல் வாழ்த்துக் குவியல்' என்னும் கவிதைத் தொகுப்பு நூலையும் வெளியிட்டார். 'பொங்கல் புதுநாளில் உங்கள் தொண்டு என்ன?' என்ற தலைப்பில் குயில் (30.12.1958) ஏட்டின் மூலம் தமிழர்கள் மூன்று கொள்கைகளை நெஞ்சில் நிறுத்திச் செயல்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார். அவை

''1. தமிழ்நாட்டைத் தமிழன் அடைய வேண்டும்.

2. தமிழ்மொழி வாழ வேண்டும்; இந்தி தொலைய வேண்டும்.

3. சாதி ஒழிய வேண்டும்; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனும் வள்ளுவர் வாய்மொழியை இறப்பு வரும் நேரத்தும் இன்னா நேரும் நேரத்தும் நினைக்க வேண்டும்'' என்பனவாகும்.

'தமிழர் திருவிழா' என்பது உணவுக்கும் உடைக்கும் உறையுளுக்கும் மூலாதாரமாய் இருக்கும் வான்சிறப்பைப் போற்றுவதாக அமைந்துள்ளது. பாரதிதாசன் வள்ளுவர் வழிநின்று காலத்திற்கேற்ப முளைத்த அய்யங்களைக் களைந்து, மழை வணக்கமே தமிழர் திருநாள் விழாவின் குறிக்கோள் என்பதை 'அமிழ்து எது?' என்னும் புதுமைப் படைப்பில் தெளிவு செய்துள்ளார்' என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும். பொங்கல் விழா என்பது முழுக்க முழுக்க உழைப்புடனும், உழவர்களுடனும் தொடர்புடைய தாகத் தோன்றியது என்பதை இன்னும் நாம் எடுத்துக் கூற வேண்டியதாக உள்ளது. ஆகையால்தான் தந்தை பெரியார் ''பொங்கல் பண்டிகையைத் தமிழர் எல்லோரும் கொண்டாட வேண்டும்'' என்பதை ஒரு பிரச்சாரமாகச் செய்து வந்தார். ஏன்?

''திராவிடத்தின் ஆதி மக்களான தமிழர் களுக்குத் தமிழர்களுக்குரிய பண்டிகை என்பதாக ஒன்றைக் காண்பது மிக அரிதாக உள்ளது. இதன் காரணம் என்னவென்றால் பிற கலாச்சாரங்களைத் தமிழனிடம் புகுத்துகிற வகையில் முதல் பணியாகத் தமிழ்நாட்டில் தமிழனின் கலாச்சாரங்களை, பழக்க வழக்கங்களை அடியோடு அழித்து மறைத்து விட்டார்கள். இதனால் தமிழனுக்குரிய கலாச்சாரம் எது என்று அறிவது கூட மிக மிகக் கடினமான காரியமாக ஆகிவிட்டது. தமிழனின் கலாச்சாரப் பண்புகள் அழித்து ஒழித்து மறைக்கப்பட்டு விட்டன என்பது மாத்திரமல்லாமல், தமிழனுக்கு வரலாறு, சரித்திரம் என்பது கூட இல்லாமல் அழிக்கப்பட்டு விட்டது'' என்பதைக் குறிப்பிட்டுக் காட்டி, பொங்கல் விழாவைத் தமிழர்கள் கொண்டாட வேண்டும் என்று கூறினார்.

தமிழ்நாட்டின் தற்காலச் சூழ்நிலை ஒருவித அச்சத்தையே நம்மிடையே உருவாக்கி வருகிறது. நுகர்வுக் கலாச்சாரத்திலும், கடவுள் பெயராலும், மதங்களின் பெயராலும் நடைபெற்று வரும் களியாட்டங்களில் மயங்கிக் கிடக்கும் தமிழர்களுக்குப் பொங்கலும் ஒரு சடங்காக மாறிவிட்டது. இந்நிலையிலும் 'நாம் தமிழர்' என்பதை நினைவூட்டும் வகையில் உழைக்கும் மக்களின் விழாவாக, உழைப்புத் திருநாளாகப் பொங்கல் விழாவைக் கொண் டாடுவது தமிழர்களின் கடமையாகும்; தமிழர்களின் உரிமையுமாகும்.

('சிந்தனையாளன் பொங்கல்சிறப்பு மலர்' - 2001)

படிப்பகம்

www.padippakam.com




தமிழ் முழக்கம்

# வெளியீட்டகம்

## தொடக்கவிழா

## குறுந்தகடு, ஒலிநாடா, நூல் வெளியீட்டுவிழா

**07-02-2001 புதன் மாலை, 5.30 மணி**

சென்னை, எழும்பூர், அருங்காட்சியக அரங்கம் (Egmore Museum Theatre)

தலைமை: பழ. நெடுமாறன்

பங்கேற்போர்: திரைப்பட இயக்குநர் ஆர். சி. சக்தி, ரபி பெர்னார்ட், எஸ். வி. ராஜதுரை, இன்குலாப், விடுதலை இராசேந்திரன், புதுக்கோட்டை பாவாணன், அறிவுமதி, சுப. வீ, புனிதப்பாண்டியன், கி. வெங்கட்ராமன், பர்வீன் சுல்தானா.

**வெளியீடுகள்:**

விடைதந்தது சந்தனக்காடு

(குறுந்தகடு-3.30 மணி நேர செய்திப் படம், விலை ரூ 500)

எஸ். வி. ராஜதுரையின்

'பெரியார்: மரபும் திரிபும்'

(நூல் விலை. ரூ 100)

சுப. வீரபாண்டியனின்

'தந்தையும் தம்பியும்'

(ஒலிநாடா விலை ரூ 30 )

தொடர்புக்கு: ஜெ. சாகுல் அமீது,
தமிழ் முழக்கம், 29. டாக்டர் குருசாமி சாலை,
சேத்துப்பட்டு, சென்னை-600 031.

**தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல்**
**சுயமரியாதை மாநாடு. வாரீர் ! வாரீர் !**


படிப்பகம்

www.padippakam.com



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

## முதன்மையான பொதுக்குழுக் கூட்டம்

*அன்புள்ள தோழர்களுக்கு, வணக்கம்.*

*மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் மாநிலப் பொதுக் குழுக் கூட்டம் 11.2.2001 ஞாயிறு காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை, சென்னையில் நடைபெறும். பின்வரும் இன்றியமையாத பொருள் பற்றிக் கலந்து பேசிட ஆயத்தமாக வர வேண்டுகிறேன்.*

பொருள்கள்

1. சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் வரவு செலவுக் கணக்கு
2. தாம்பரம் தமிழ் வழிக் கல்வி மாநாட்டு வரவு செலவுக் கணக்கு
3. சுயமரியாதை இயக்கப் பவழ விழா
4. மா.பெ.பொ.க. வெள்ளி விழா
5. தமிழ் வழிக் கல்வி ஆதரவுப் பரப்புரைப் பயணம்
6. சிந்தனையாளன் ஏட்டின் வளர்ச்சிக்கு வழிகாணல்
7. பெரியார் - நாகம்மை அறக்கட்டளை கட்டடப் பணிகள்

இடம்: சென்னை, திருவல்லிக்கேணி, அரசு அலுவலர், ஒன்றியம் சிவ இளங்கோ இல்லம்.

*மாவட்டப் பொறுப்பாளர்கள், நகரப் பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாமல் வருகை தர வேண்டுகிறேன்.நன்றி*

தோழமையுள்ள
**வே.ஆனைமுத்து**
*அமைப்புக் குழுச் செயலாளர்*

---

அரிய கட்டுரைகளையும், கருத்தாழம்மிக்க கவிதைகளையும்,
எழிலொழுகும் வண்ண முகப்பு அட்டையையும் கொண்ட
'சிந்தனையாளன்' பொங்கல் சிறப்பு மலர்.

**432 பக்கங்கள் - தனிப்படி நேரில் ரூ.50**
**தனிப்படி - அஞ்சல் வழியில் பெற ரூ.75**

ஒரே நேரத்தில், விற்பனைக்கு 10 படிகள் பெறுவோர்
ரூ.450/- மட்டும் வங்கி முறி (D.D) வழி விடுத்திடல் வேண்டும்

மிகச் சில படிகளே உள்ளன.
*படிகள் தீருமுன் முந்திக் கொள்ளுங்கள்*

வங்கி முறி எடுக்க வேண்டிய பெயர் ''சிந்தனையாளன்'' -**"SINTHNAIYALAN"**

- ஆசிரியர் குழு
''சிந்தனையாளன்''

**தஞ்சையில் 2001 பிப்ரவரி 17, 18 இல்**
**சுயமரியாதை மாநாடு. வாரீர் ! வாரீர் !**

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி பிப்ரவரி 2001

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| இரா.பத்மநாபன் | சென்னை | 25.00 |
| ப.இளங்கோவன் | சென்னை | 25.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 20.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அ. அறிவுக் கடல்-இராஜ்குமார் | சிதம்பரம் | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எறும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| லோ.இர.குமார் | சென்னை | 200.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 750.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| சி.கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர் | காட்டுமன்னார்கோயில் | 20.00 |
| ஆசைத்தம்பி | நாரியமங்கலம் | 100.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம் | கிண்டி | 50.00 |
| பூ.இரா. வேணுகோபால் நினைவு நிகழ்ச்சி | | 100.00 |
| ந.அப்துல்ரகுமான் | ஆங்காங் | 260.00 |
| பால்வண்ணன் | வடக்குமாங்குடி | 10.00 |
| சிதம்பரன் கி. வழக்கறிஞர் | ஈரோடு | 100.00 |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| அப்துல் ரகுமான் | சென்னை | 750.00 |
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |
| சிகோ | இரும்புலிக்குறிச்சி | 200.00 |

## சூலூர் - பாவேந்தர் பேரவை எடுத்த பெரியார் - அண்ணா பிறந்த நாள் விழா

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா இருவரின் பிறந்த நாள் விழா - வழக்கம் போல் இவ்வாண்டும் சூலூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சூலூர் அண்ணா சீரணிக் கலையரங்கில் 14.10.2000 மாலை நிகழ்ந்த விழாவில் - பாவேந்தர் பாரதிதாசன் மைந்தர் புதுவை மன்னர் மன்னன் ''என் தந்தையும் இனத் தந்தையும்' எனும் பொருளிலும், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் 'விடாது... கருப்பு' எனும் பொருளிலும் சிறப்புரை யாற்றினர்.

மதுரை பெரியார் பித்தன் நடத்திய மூட நம்பிக்கை ஒழிப்பு மந்திர தந்திர நிகழ்ச்சி அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

★ சாதி மறுப்புமணம் புரிந்தோர் ★ நல்ல தமிழ்ப் பெயர் தாங்கிய குழந்தையர் ★ வணிக நிறுவனத் தமிழ்ப் பெயர் வைத்தோர் ★ வாகனங்களில் தமிழ் எண் பதித்தோர் ★ கொள்கை இதழ் பரப்பும் குறிக்கோள் வாழ்வினர் - முதலியோருக்கு விழாவில் பாராட்டும் பரிசளிப்பும் வழங்கப்பட்டன.

கி.மா.கனகராசன் வரவேற்க, செயலர் சூ.நா. வரதராசு அறிக்கை வாசிக்க, பெ.க. சண்முகவேல் தலைமையேற்றார். சூ.ஆ.சு.மணி நன்றி கூறினார்.

செய்தி: க.தேவராசு

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: ;852 28 62

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618

# கும்ப(ல்) மேளா

- தமிழேந்தி



வறுமை போர்த்திய
வாழ்க்கை
கந்தலுக்கும்
கதியற்றுக்
கலங்கும் மக்கள்

சாவதா? வாழ்வதா?
தொடரும் அவலம்
இங்குதான்
சாமிச் சவுண்டிகள்
அம்மண ஊர்வலம்

அகண்ட பாரதம்
அடையும் அணிவகுப்பாய்க்
கோவணமும் துறந்த
கும்பமேளாத் தடியர்கள்

செய்தித்துறை அமைச்சர்
சுஷ்மா சுவராஜ்
எல்லா அலை வரிசையிலும்
இதனைஒளி பரப்பினால்
பாரதப் பண்பாட்டைப்
பாரே போற்றும்

ஊர்வல முகப்பில்
அத்வானி
முரளிமனோகர்
இதே கோலத்தில்
ஏறுபோல் நடந்தால்
'இணை'யத்தில் கூட
இடம்பெறச் செய்யலாம்

பாவம்;
பிடிவாதம் பிடித்தாலும்
பிரதமரால் முடியாது
முட்டிவலி; மூட்டுவலி

மொரார்ஜி தேசாய்
மொழிந்ததைப் போல்
சாதுக்களின்
'கோமியம்' சாப்பிட்டால்
சர்வ வலியும்
நிவாரணம் ஆகலாம்

நம்ம ஊர்
'சோ' மொட்டையன்கள்
இதன் மகத்துவம் பற்றி
மறுவாசிப்புச் செய்யலாம்

இத்தாலியக்
கறைகழுவ, எந்த
நாற்றக் குளியலும்
ஏற்றதே என்கிற
நானா நீயா போட்டியில்
சோனியா!
கொடுவாள் ஏந்திய
மதவெறிக் கும்பலுக்குக்
கூர்தீட்டிக் கொள்ள
நல்ல வாய்ப்பு

கொழுப்பெடுத்துத்
திரியும் இந்தத்
தடிமாடுகளை
முட்டிக்கு முட்டித் தட்ட
அடிப்படை மக்களின்
அரசதிகாரமே வழி
ஈட்டியும் சூலமும்
என்னாகும்?
'மக்கள் ஒற்றுமை'ப்
பாறையில் மோதினால்
முருங்கைக் கிளைகளாய்
முறிந்து வீழும்!

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்